Registered M. 916

THE VEDANTA DIPIKA

A RELIGIOUS & PHILOSOPHICAL MONTHLY.

Vol. VIII. December 1917. No. 3

Editor.—DEWAN BAHADUR T. T. RANGACHARIAR, B.A., B.L.

வேதாந்த தீபிகை

ஸம்புடம் 8.] பிங்கள ௵ மார்கழி [ஸஞ்சிகை 3

1. பத்ராதிபரின் குறிப்புகள் 101

2. நம்முன்னோர்களுடைய த்ருவதேச வாஸம்
பத்ராதிபர் 113

3. குருபரம்பராநுஸந்தாந க்ரம நிரூபணம் 121

4. வேதாந்த ஸங்க்ரஹம்
ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ... 132

5. ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் 139

6. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்
ஸ்ரீ. உப. எஸ். வாஸுதேவாசார்யர் 144

7. கடிதங்கள் 149

8. ஏழாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம் ... 150

PUBLISHED BY THE SECRETARY SRI V. S. SABHA.

K. R. Press, Madras.

Copy-right reserved.

Annual Subscription Rs. 3-0-0] [Single Copy As 4.

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

இப்பத்ரிகையின் மூக்கிய நோக்கங்கள்.

(1) உபநிஷத்துக்களிலும், ப்ரஹ்மஸூத்ரம் பகவத்கீதை முதலான க்ரந்தங்களிலும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகளிலும் இருக்கும் விஸிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்கள் வெளியாக்கப்படும்.

(2) அத்வைதம், த்வைதம் முதலான மதங்களின் ஸ்வபாவங்களும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக்கொண்டு எடுத்துக் கூறப்படும்.

(3) தைவபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் கதைகளும் வெளிவரும்.

இதைப்பற்றி சில அபிப்ராயங்கள்.

(1) **இந்து நேசன் :—** ———————— 12 - மாத பத்திரிகையின் கிரயம் ரூபாய் இரண்டாயிருப்பினும், அமைக்கப்பெற்ற விஷயங்களின் சீரும், பாஷையின் நடையும் விலையில்லா மாணிக்கங்களென்றே சொல்லலாம்.

(2) மதிராஸ் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதரான மஹாமஹோபாத்தியாயர் வே. ஸ்வாமிநாத ஐயர் : இது தென்னாட்டுப்பத்திரிகைகளுக்குள் முதன்மையான தென்று சொல்லலாம்.

(3) மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர் :—

...............இதில் விசிஷ்டாத்வைத மத ஸம்பந்தமான உபந்யாஸங்களும் வேதாந்தார்த்த விசேஷ விசாரங்களும் புராணகதைகளும் ஆசார்ய சரித்ரங்கள் முதலியவை வெளியிடப்படுகின்றன. இதற்கு விஷயப்ரதானம் செய்பவர்கள் உபயவேதாந்த பாரங்கதர்களாகவும் சாஸ்த்ர ஸம்பந்நர்களாகவும் காணப்படுதலால், பாரலௌகிக புருஷார்த்தங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு இதில் நன்கு விவரிக்கப்படு மென்று தோன்றுகின்றது.

NOTICE.

Subscribers are requested to quote the wrapper number in all their communications to the manager. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர் வேதாந்த தீபிகை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா" என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும் கட்டணம் கட்டுவதும் விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும் மற்றெல்லா விஷயங்களும் விலாஸத்தில் குறித்திருக்கும் நம்பரைக் கண்டு, "மானேஜர், வேதாந்த தீபிகை, 11, கேஸவப்பெருமாள் ஸந்நிதி வீதி, மயிலாப்பூர், மதிராஸ்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 3.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 8.] பிங்கள ஞு மார்கழிமீ [ஸஞ்சிகை 3.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸநாதந தர்ம விஷயம்.

இந்தியர்களில் ஸ்வாராஜ்யாபேக்ஷையுள்ளவர்கள் ஆங்கிலேய பாதிரிமார்களை அநுகூலர்களாகப் பாவிக்கின்றனர். ஆறாயிரம் வருஷங்கட்கு முற்பட்ட ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியோடு, அஸந்தர்ப்பமாயும் அஸம்பாவிதமாயும் இருக்கின்ற பல கதைகள் பைபில் புஸ்தகத்தை இன்னும் விட்டொழியவில்லை. ஆகிலும் பதார்த்த ஶாஸ்த்ரங்களின் பரிசயத்துடன், ஆதுநிக பாஶ்சாத்ய வித்யாப்யாஸம் செய்துள்ள பாதிரிமார்கள், இந்தியர்கள் யாவரும் கிறிஸ்தவர்களாகின்ற வரையில் ஸ்வப்ரயத்நத்தினின்று விராமத்தைக் கருதுகின்றார்களில்லை. அதற்கு விரோதமாக நம்முடைய ஸ்வாராஜ்யாபிமாநிகள் யாதும் சொல்வதில்லை; செய்வதும் காணோம். ஆனால் ஸநாதந தர்மத்துக்கோ அவர்கள் ப்ராயேண ஸபத்நீமாதாக்களாகப் பரிணமிக்கின்றார்கள்.

ஜந்மஸித்தமாகப் பரிணமித்த ப்ராஹ்மண்யம் லோக வ்யவஹாரத்தில் ஜநங்களுக்கு ப்ராஜ்ஞதமர்களுடைய ஸஹாயத்தைத்

ந்தமெனச் சொன்னுர் ஆநந்த குமாரஸ்வாமி. இன்னும் ப்ராஹ்மண ப்ரயத்நத்தால் ஸமுதாயமாக நமது தேசப்ரஜைகள் மற்ற தேசஸ்தர்களை அதிக்ரமித்து, ஸத்குண நிஷ்டர்களாகவும், பரஸ்பரம் ஹிதைஷிகளாகவும் போந்தார்களெனவும் சொன்னுர். நம் தேச சரித்ரத்தை நிதாநித்து யோசித்தால் அதன் உண்மைகள் வெளியாகும். கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜ் உட்ராப் துரையவர்கள், 'நம் தேசத்தவர்கள் தமது பூர்வ வித்யையை விட்டொழிகின்றுர்கள்' என்று க்லேசிக்கின்றுர். ப்ரஜ்ஞாசாலிகளான ஐரோப்பர்கள், வேதாந்த மதம் ஸர்வோத்க்ருஷ்டமானதென்று சொல்லியிருக்கின்றுர்கள். அதனுடைய ரக்ஷணத்தின் பொருட்டு நம்மவருள் ஸ்வாராஜ்யாபிமாநிகள் நியமேந யாதொரு முயற்சியையும் காட்டுவார்களில்லை.

ஸர்வாங்காபிருசியோ, ஸர்வத்ரபோஜநாபேக்ஷையோ, சிலர்க்கு ஜாதி நியமத்திலும் வர்ண தர்மங்களிலும் த்வேஷத்தை ஜநிப்பிக்கின்றன. அவர்கள் ஜாதி தர்மங்களும் ஜாதி பேதங்களும் சாகவே வேண்டுமென்பார். ஸ்வக்ருஹங்களில் அவர்கள் ஜாதி தர்ம பஹிஷ்க்ருதர்களாய் முற்றிலும் போவதில்லை. அதுபோன்றிருக்கின்றது அவர்கள் தாடஸ்த்யம். அபிமாநமற்றவன் வீணுக ப்ராஹ்மண்யத்தைச் சுமப்பானேன்? அதை ரக்ஷிப்பவர்கள் என்றும் சிலரே. ப்ராஹ்மணர்கள் ஸங்க்யை குறைவது ஸஹஜம். நமது தர்மங்களை ராஜாக்கள் ரக்ஷிக்கும் காலங்களில் ப்ராஹ்மண ப்ரஷ்டன் வ்யவஹாரத்தில் ப்ராஹ்மணனுகப் பாவிக்கப்படமாட்டான். இக்காலமோ ப்ராஹ்மண்யத்தின் ஆத்யந்திக நாசத்தை வேண்டிக்கொண்டே பலர் ப்ராஹ்மண க்ரியைகளை ஸ்வக்ருஹங்களில் அநுவர்த்திப்பதாய் எண்பித்துக்கொண்டு, அவற்றில் கிஞ்சித்தும் ச்ரத்தையின்றி அந்யதாகரணம் செய்துகொண்டிருக்கின்றுர்கள். ஸ்வதர்மம் ப்ரயத்ந பூர்வமாக ரக்ஷிக்கத் தக்கது என்று பெரியோர் வசநம். அது ப்ரயத்நபூர்வமாக நாசம் செய்யப்படுகின்றது.

* * * * * *

தத்காலம் அப்ராஹ்மணர் சிலரிடம் ஏற்பட்டிருக்கிற ப்ராஹ்மண த்வேஷம், ப்ராஹ்மண்யத்தை ரக்ஷிக்கின்றவர்களிடம் ப்ரதமத்தில் ஏற்படவில்லை. ஜந்ம ப்ராஹ்மணர் அதிகமாக உத்யோகம் செய்கின்றுர்களென்று, உத்யோகம் செய்பவரிடம் அது

ஆரம்பித்தது. உத்யோகார்ஹதையை அவர்கள் மிகுதியாக ஸம்பாதித்தாரெனும் யோசனை த்வேஷம் செய்பவர்க்கு உண்டாவதில்லை. உத்யோகத்தை ப்ராஹ்மணர்கள், வ்ருத்யந்தரமில்லாதபடியால் அபேக்ஷித்தார்கள் என்றும் த்வேஷ க்ருத்துக்கள் நினைப்பதில்லை; தங்களுக்குள் ப்ராயேண வ்யவஸாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலான வ்ருத்யுபாயங்கள் அடங்கி நிற்பதையும் யோசிக்கின்றாரில்லை. இந்த ரூபமான வ்ருத்திகளுக்கு ப்ராஹ்மணர்கள் யோக்யதை யில்லாதவர்கள் என்பதையும் எண்ணுகின்றாரில்லை. க்ரமமாக ப்ராஹ்மணர்கள் உத்யோகங்களில் ப்ரவேசித்தபோதிலும், அந்த ஸம்பந்தமாக அவர்கள் பல அக்ருத்யங்கள் செய்தாரென்று மித்யாபவாதம் சொல்கின்றனர். உத்யோகம் செய்பவரில் பலர் ப்ராஹ்மண்ய பஹிஷ்க்ருதராயும், த்வேஷிகளுடன் ஸஹபோஜநாதிகள் செய்பவராயும், ஸ்வயம் வர்ணாச்ரம தூஷகராவும், இருந்தபோதிலும், அவர்களையும் த்வேஷிக்கின்றனர்; த்வேஷிக்கவென்றே அவர்களை ப்ராஹ்மணரென்று சொல்கின்றனர்; முடிவில், தமது உத்தேசங்கட்கு யாதொரு ப்ரதிபந்தகமும் செய்ய அஸமர்த்தர்களான வைதிக ப்ராஹ்மணர்களையும் த்வேஷிக்கின்றனர். இது கலியின் கொடுமையே.

* * * * * *

வர்ணாச்ரம தர்மங்கள் ப்ராயேண தத்காலம் ப்ராஹ்மணர்களிடமே வஸிக்கின்றது. அவர்களுக்குள்ளும், பாச்சாத்ய வித்யா ஸம்ஸ்கார மடைந்த பலர் அவற்றை நழுவவிடுகின்றார்கள். அவற்றை விச்வஸிப்பவர்கள் மாத்ரம், ஸ்வார்த்தமாக, அவற்றினுடைய ரக்ஷணத்தைக் கருதி, ததர்த்தம் முயற்சி செய்கின்றார்கள். இந்த முயற்சி யாதொரு மநுஷ்யனுக்கும் துன்பம் விளைவிக்கமாட்டாது. அப்ராஹ்மணாக்ரேஸரர்கள் தம்மவர்க்குள் யாராவது வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநம் பண்ணிவிடுவார்களோவென்று பயங்கொள்ள இடமில்லை. நற்சந்து வீதிகளில் நின்றுகொண்டு வர்ணாச்ரம தர்மங்கள் போதிக்கப்படமாட்டா. ப்ராஹ்மணனாகப் பிறந்தவன் தனது முன்னோர்களான ருஷிகள், பித்ருக்கள் இவர்கள் த்ருப்திக்காக வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநம் செய்யக்கடவன். 'ஸ்வேவ ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:'

என்றும், 'இஷ்டாந் போகாந் ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞபாவிதா:।' என்றும், 'யஜ்ஞசிஷ்டாசிந: ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை:।' என்றும் 'ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் நாநுவர்த்தயதீஹ ய:। அகாயுரிந்த்ரியாராமோ மோகம் பார்த்த ஸ ஜீவதி॥' என்றும், பகவானுல் காட்டப்பட்ட மார்க்கத்தில், லோகஹிதத்தில் ப்ரவர்த்திக்கும் தேவதைகளுடைய பூஜையை ப்ராஹ்மணன் செய்யக்கடவன். இன்னும், 'மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத்' [புத்திமான் வைதிகாசாரத்தினுடைய அதிலங்கநத்தை மநஸ்ஸிலும் எண்ணவேண்டாம்] என்றும், 'ச்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே। ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ' [ச்ருதியும் ஸ்ம்ருதியும் என்னுடைய ஆஜ்ஞைகளேயாம். எவனொருவன் அவற்றை அதிலங்கநம் பண்ணி நடக்கின்றானே, அவன் என்னுடைய ஆஜ்ஞையைத் திரஸ்கரித்தவன்; எனக்கு த்ரோஹம் செய்தவன்.] 'அசாஸ்த்ரமாஸுரம் க்ருத்ஸ்நம்' [சாஸ்த்ர விரோதமானவை யெல்லாம் அஸுர ப்ரவ்ருத்தி.] 'ஏவம் விலங்க்ய து மர்த்யோ மர்யாதாம் வேதநிர்மிதாம்। ப்ரியோபி ந ப்ரியோஸௌ மே' [இவ்வண்ணம் வேதத்தால் ஏற்பட்ட மர்யாதையைப் பலவிதமாக அதிக்ரமித்த மனிதன், வேறு ஆகாரத்தால் எனக்கு ப்ரியனுக விருந்தாலும், வாஸ்தவத்தில் எனக்கு ப்ரியனன்று] என்றும், 'யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்। யஜ்ஞோ தாநம் தபச்சைவ பாவநாநி மநீஷிணாம்' என்றும், இந்த ரீதியான பகவத் வசநங்களை ப்ரமாணமாகக்கொண்டு, நம் பெரியோர்கள் குலதர்மங்களையும், ஆச்ரமதர்மங்களையும், பாதுகாத்து வந்தார்கள். அவற்றை த்வேஷிக்கின்றவர்கள் அவற்றினுடைய அர்த்தங்களையும் ப்ரயோஜநங்களையும் நன்றாகத் தெரிந்துகொண்டு அவ்வண்ணம் செய்கின்றார்களில்லை. இங்கிலிஷ் பாடசாலைகளுக்குள் அவர்களுக்கு ப்ரவேசம் உண்டாகும்போதே, ஸந்த்யாவந்தநம் முதலான க்ரியைகளைச் செய்வதற்கு அவகாசம் போய்விடுகின்றது. அவர்களுடைய இங்

த்ரியங்கள் இருக்கின்றபடியே அவர்களுடைய மாஸ்ஸுகள் போ கேச்சைகளைக்கொள்கின்றன. அத்ருஷ்டரூபமான ப்ரேயஸ்ஸு களில் அவர்களுக்கு விஸ்வாஸம் குறைகின்றது. இன்னும் அப் படிப்பட்ட ப்ரேயஸ்ஸுகளை ஸாதித்துக் கொடுப்பதாகப் பெரி யோர்களால் சொல்லப்பட்ட உபாயங்களை அவர்கள் விவேகிக்கா மலே நம்பாமல் விடுகின்றனர். அதற்கு உபபலமாக உபதேசங்க ளும் அமைகின்றன. ஸத்கர்மங்களிலும் வைதிக மர்யாதைகளி லும் ஆபாதமாகச் சில தோஷங்களும் காட்டப்படுகின்றன. ஆத லால் மேலே விவரித்தபடியே புத்திபேதங்கள் இக்காலம் உண் டாகின்றனவென்பதன்பொருட்டு விஸ்மயம் கொள்ளவேண்டாம்.

* * * * * *

வர்ணாஸ்ரம தர்மங்களைக் கைவிட்ட சிலர், அவற்றை த்வே ஷிப்பதாகத் தமது வார்த்தைகளால் காட்டாமல் போனாலும், காலக்ரமத்தில் அவற்றின் நாசத்தை ஒப்புக்கொண்டவர்கள்போல நடக்கின்றார்கள்; ஜாதிபேதங்கள் ஸ்வாராஜ்ய ப்ரயத்நத்துக்கு இடைஞ்சலா யிருப்பதாக நினைத்து, அந்தப் பேதங்கள் நிலைப்ப தற்கு வர்ணாஸ்ரம தர்மங்கள் ஹேதுவாகலாம் என்று யோசித்து, அந்தத் தர்மங்கள் குறைந்துபோய் க்ரமேண அபாவத்தை அடை வதில் த்ருப்தர்களாயும் தென்படுகின்றார்கள். அவர்களில் இங்கி லீஷ் படித்த ப்ராஹ்மணர்கள் பலருண்டு. துலுக்கருக்கு ஒரு மதம் உண்டு. கிறிஸ்தவர்களுக்கும் ஒரு மத முண்டு. அந்த வகுப்பினர்க்குள் இவ்விரண்டு மதங்களும் நிலைக்கும். நம்மு டைய ஜநங்கள் அவ்வகுப்பினர்க்குள் சேராமல்போனால், அவர் களுக்கு மதமெங்கே? ஆர்யமதம் வர்ணாஸ்ரம தர்மங்களில்லா மல் ஜீவிக்கமாட்டாது. உபநிஷத், ப்ரஹ்மஸூத்ரம், பகவத் கீதை இம்மூன்றும், எல்லா மோக்ஷோபாயங்களுக்கும் ஆஸ்ரம தர்மங்களை அங்கங்களாக அபேக்ஷிக்கின்றன. அநார்யஜுஷ்ட மான சில ஆதுநிக விஸ்வாஸங்கள் மேற்சொன்ன ப்ரமாணங்களை விரோதிக்கின்றன.

இந்த ஸெப்டம்பர்மாதம் 'மாடரன்ரிவ்யூ' பத்ரிகையில் கல் கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸர்ஜான் ஊட்ராப் துரையவர்கள் ஶாக்தர்களுடைய தந்த்ர விமர்சை செய்கின்றார். அங்கே, "பல அவஸரங்களில் நான் காட்டினபடியே, ஸாதனையைப்பற்றிய யோ

சனையானது மிகவும் விசேஷித்தது; தத்காலம் அது மிகவும் அநாதரிக்கப்பட்டது; மற்றெந்த அம்சத்தைக்காட்டிலும் இந்த அம்சம்தான் தந்த்ரசாஸ்த்ரங்களின் ப்ரயோஜநத்தை வெளிப்படுத்துகின்றது. மதத்தைப்பற்றிச் சும்மா ஸம்பாஷித்தல் புத்திக்கு வ்யாபாரத்தை மாத்ரம் அளிக்கின்றது.'' "மதமென்பது, மநஸ், சரீரம், இவை இரண்டினுடைய பழக்கங்களை வேண்டுகின்றது. ஆத்மா, மநஸ், சரீரம் இம்மூன்றினுடைய வ்யாபாரங்களையும் அது அபேக்ஷிக்கின்றது'' என்று, இவ்வண்ணம் அவர் சொல்லி விட்டு, மதமென்பது பல க்ரியாகலாபங்களை அபேக்ஷிக்கின்றதென்று தீர்மானிக்கின்றார்.

ஹிந்து கிறிஸதவ மதங்களுக்குள் பல ஸமாந விச்வாஸங்களையும் சடங்குகளையும் அவர் எடுத்தும் காட்டுகின்றார். விஸ்தார பயத்தால் நாம் அவற்றை எழுதுகின்றோமில்லை. மஹம்மதிய மதமும் க்ரியாவிசிஷ்டமாகத்தான் இருக்கிறது. எந்த மதத்திலும் யாவரும் கர்மங்களுக்கு ஸ்வரூபத்யாகத்தை முடித்துவிட்டு, ஜ்ஞாநைகநிஷ்டர்களாய் இருக்கமுடியவில்லை. ஹிந்துவாயிருந்து காதலிக் (Catholic) மதத்தைச் சேர்கின்றவன், அவர்களுடைய க்ரியாகலாபங்களைத் தூஷிக்கின்றானில்லை; மஹம்மதியனாகின்றவன் மஹம்மதியர் சடங்குகளை வெறுக்கின்றானில்லை.

ஒவ்வொரு மதத்திலும் சில புத்திமான்கள் க்ரியைகளை அதிக்ரமிக்கலாம்; கர்ம ஸந்யாஸிகளாயிருக்கலாம். இது அதிகாரிகளைப் பொறுத்தது; 'கர்மண்யேவாதிகாரஸ்தே' என்று பெரும்பாலோர்க்கு வர்ணாச்ரமதர்மங்களிலேயே அதிகாரத்தைப் பகவான் விதித்தார். ஜ்ஞாதாக்களையும், 'லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந் கர்துமர்ஹஸி' என்று, லோகஸங்க்ரஹத்தின் பொருட்டு ஸ்வதர்மங்களைச் செய்யும்படி ஆஜ்ஞாபித்தார். இன்னும் 'ந புத்திபேதம் ஜநயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம்' என்று சொல்லி ஜ்ஞாநாதிகாரிகள் கர்மங்களை விட்டொழிந்தால் கேவலகர்மாதிகாரிகளும் அதைப் பார்த்துப் புத்திகெட்டுக் கெட்டுப்போவார்களென்று உரைத்தார். ஆதலால் ஜ்ஞாநமுள்ளவர்கள் ஸர்வவர்ணாச்ரம தர்மங்களையும், பகவதாராதநமாகவே அநுஷ்டிக்கின்றார்கள். அதுதான் கீதாசார்யன் திருவுள்ளம். ஸர்வ கர்மங்களும் பர்யாலோசனையில், பகவதாராதநமாகவே யிருக்கின்றன.

இப்படி நம்முடைய பித்ருக்களுடைய த்ருப்திக்காகவும், நம்முடைய ருஷிகளிடம் க்ருதஜ்ஞதை பாராட்டியும், நம்முடைய லோகரக்ஷணத்தில் ஆஜ்ஞப்தர்களான அதிகாரிதேவதைகளுடைய ஆராதநமென்று நினைத்தும், பகவானுடைய ஆஜ்ஞையை அநுஸரித்தும், அதனுடைய உல்லங்கநத்தில் வருகின்ற ப்ரத்யவாயங்களை யோசித்தும், வர்ணமொன்றில் பிறந்து ஆச்ரமமொன்றில் நின்றவன் ஸ்வதர்மங்களைக் கைவிடாமல் நிற்கவேண்டுமென்று நம்பி, வர்ணாச்ரமதர்மாபிமானிகள் தமக்காகவும், தம்முடைய ஸந்ததியார்க்காகவும், தத்தர்மரக்ஷண வ்யாபாரவான்களாய்ப் பூர்வாசாரத்தை அநுவர்த்திக்கின்றார்கள்.

* * * * * *

ஆனால், வர்ண பேதங்களும், ஒவ்வொரு வர்ணஸ்தர்களும் செய்யவேண்டிய க்ரியாபேதங்களும் ஏற்படுவானேன் என்று இப்போது வினவுகின்றவர் உண்டு. இதற்கு ப்ரத்யுத்தரம் தந்தோம். இன்னும் யாவரும் ப்ராஹ்மணனாகப் போய்க் குளக்கரையில் ப்ராணாயாமம் செய்துகொண்டிருந்தால் லோகவ்யாபாரம் நடக்காது. யாவரும் க்ஷத்ரிய வ்ருத்தியை அவலம்பித்துப் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் லோகம் அற்றுப் போகும். தேசாந்தரஸ்தருடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் பாபம் வளரும். தேச ரக்ஷண்த்தை உத்தேசித்து வேண்டியமட்டும் தான் ப்ரஜைகள் க்ஷத்ரிய வ்ருத்தியை அவலம்பிக்கலாம். தேசத்தின் ஐஹிக க்ஷேமம் வைச்யரைப் பொறுத்தது. ஆர்ய ஜநங்களில் பெரும்பாலோர் வைச்யரே. விஸ் என்றால் ப்ரஜைகளுக்கு ஸமுதாயநாமம். விச்பதி என்றாலும் விசாம்பதி என்றாலும் ஜநாதிபன், அதாவது ராஜா என்று அர்த்தம். க்ருஷி வ்யாபாரம் அவர்களுடையது; வர்த்தகம் அவர்களுடையது; பொருள் சேர்த்தல் அவர்களுடையது; தேசத்தினுடைய யோக க்ஷேமங்களெல்லாம் அவர்களைப் பொறுத்தது. இந்தியாவில் எங்கு சென்றாலும் வைச்யர்களோ, வைச்ய க்ருத்யங்களைப் பரம்பரா தர்மமாய் உடைய ஜநங்களோதாம் அதிகமாய் இருப்பார்கள். சரித்ரத்தைச் சோதித்தால் ஆர்யராய் இருந்த பலர் சூத்ரரானார்கள். மற்றோரும் அக்கூட்டத்தில் சேர்ந்திருக்கலாம். அவர்களில் பலர் சரீரச்ரமத்தால் ஜீவிக்கின்றார்கள். மதமே தொழிலான ப்ராஹ்மணனுக்குக் கர்மங்கள் அதிகம். ஆர்யர்

களான க்ஷத்ரிய வைச்யர்களுக்குக் கர்மங்கள் குறைவு. மதத்தைத் தங்களுக்குள்ளும் பரர்களிடமும் பாதுகாக்கும் கடமை ப்ராஹ்மணர்களுடையது. ஆதலால் கர்ம பேதங்கள் அதிகார பேதங்களால் ஏற்பட்டன.

இச்சைப்படி ஒவ்வொருவனும் கர்மங்களையும் வ்ருத்தியையும் மேற்கொள்ளலாமே; ஜந்மத்தால் வ்ருத்தி நியமங்களை ஏற்படுத்துவானேன்? என்றொரு ஆக்ஷேபணையுண்டு. இப்போது ஜந்ம ஸித்தமான வ்ருத்திகளை ஒவ்வொருவரும் மேற்கொள்வதில்லை. வ்ருத்திகள் ஜீவநோபாயங்கள். ஜீவந நிமித்தமாக லபித்துப் பகவதாராதநமாகச் செய்யவேண்டிய வர்ண தர்மத்தையும் ஆச்ரம தர்மத்தையும் யதோசிதம் செய்யவேண்டிய கடமை த்விஜர்களுக்கு உண்டு. அவர்கள் வர்ணாச்ரம தர்மங்களைச் செய்வதால் அடையும் த்ருஷ்டப்ரயோஜநங்கள் இல்லை; செய்யாமல் விடுவதில் தோஷம் உண்டு; ப்ரதமதோஷம் பகவானுடைய ஆஜ்ஞையின் திரஸ்காரம்; இரண்டாவது தோஷம் தேவ ருஷிபிதுர்க்களின் அதிருப்தி. இவை சாஸ்த்ரத்தால் அறியவேண்டிய அம்சங்கள். 'தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ' என்று தர்மாநுஷ்டாந விஷயத்தில் பகவான் நமக்கு சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் காட்டியிருக்கிறார்.

வர்ணத்தில் பிறந்து ஆச்ரமத்தில் புகுந்தவனுக்குத்தான் வர்ணாச்ரம தர்மங்களுண்டு. இரண்டுமில்லாதார்க்கு அவையில்லை. அவை அதிகாரவிஷயம். அவற்றிற்கேற்றபடி முன்காலங்களில் பரம்பராகதமாக வ்ருத்திகளும் ஏற்பட்டன. அவ்வவர் தொழில்களை ஸரியாகச் செய்துகொண்டு ஒருவர்க்கொருவர் உபகரித்துக்கொண்டு யாவரும் லோகஹிதத்தை அநுஷ்டித்தார்கள்; ஒருவர்க்கொருவர் ஸ்பர்த்தை, ஈர்ஷை, மாத்ஸர்யம், த்வேஷம் இவையற்று வாழ்ந்தார்கள். இச்சித்தபடியெல்லாம் தொழில் செய்வதில் மேல்விவரித்த தர்க்குணங்கள் விதியின்றி ப்ரகாசிக்கின்றன. பல கக்ஷிகள் உண்டாகின்றன. இந்த யோசனைகளுக்கு நிதர்சநம் ஐரோப்பாகண்டத்தின் தத்கால ஸ்திதியே; மிதமற்றுப் பொருளாசை, போகேச்சை, அவற்றின்பொருட்டுச் சில ஜநங்கள் பல ஜநங்களைத் தம் வசமாக்கல், பரதேசாக்ரமம்,

தர்த்தம் பரஸ்பரத்வேஷம், யுத்தம், இவ்வண்ணம் அநர்த்த பரம்பரைகள் ப்ரவஹிக்கின்றன. தேசாந்தரஸ்திதிகளைக் கண்டு வர்ணஸாங்கர்யத்தை இச்சிக்கின்ற ஜநங்கள், ஸ்வதேசாசாரங்கள் முற்றிலும் கெட்டதென்று நினைப்பது ஸஹஜம். ஆனால், தாங்களெண்ணியபடியே, யாவரும் எண்ணமுடியாதென்று அறிந்து கொள்ள அவர்கள் அஸமர்த்தர்களோ? தேசகாலம் அவர்க்கு அநுகூலமாயிருப்பதை நாம் அறிந்திருக்கின்றோம். பாஶ்சாத்ய வித்யையானது நமது பூர்வஸ்திதியின் ஜ்ஞாநத்துக்குத் திரைபோட்டு விட்டது. தத்வித்யாபரிசயம், அதற்கேற்றபடி ஸம்ஸர்க்காதிகளை அமைக்கின்றது. இது நமக்குத் தெரியும். 'ராஜாநமநுவர்த்தந்தே யதாராஜா ததா ப்ரஜா:' என்கிற வசநமும் பொய்யல்ல. ஆகிலும் நாம் அறிந்தபடியே நமது ஆத்மரக்ஷண வ்யாபாரத்தை நாம் செய்யக்கடவோம். நேற்றுவரையில் நம்முடைய பக்ஷத்தில் நின்றுகொண்டிருந்து, யாதேனுமோர் ப்ரமையாலோ, நமது வித்யாத்வேஷிகளுடைய தூண்டுலாலோ, நம் ஜநங்களுடைய ஶாஶ்வதமான அநுகூலங்களைப் பராமர்சிக்கத் திறனற்றோ, தாத்காலிகமான அல்பபோகங்களுடைய இச்சையால் ஆகர்ஷிக்கப் பட்டோ, நமது தர்மங்களைத் தூஷிக்கின்றவர்கள், 'விஹாய ஹவ [illegible] க்ஷுத்ர [illegible] ப்ரைஷயாச [illegible] ப்ரயதே' என்கிற ஆசார்யோக்திக்கு த்ருஷ்டாந்தமாகின்றனர். வர்ணாஶ்ரமிகள் ப்ரமாண ஶரணர்கள்.

* * * * * *

"தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிந: । நகரஸ்தோ வநஸ்தோ வா த்வம் நோ ராஜா ஜநேஶ்வர: ॥ ந்யஸ்ததண்டா வயம் ராஜந் ஜிதக்ரோதா ஜிதேந்த்ரியா: । ரக்ஷிதவ்யா ஸ்த்வயா ஶஶ்வத் ॥" [நீ நகரத்திலிருந்தாலும், வநத்திலிருந்தாலும், ஜநேஶ்வரனான நீ உன் ராஜ்யத்தில் வஸிக்கும் எங்களுக்கு ராஜா; உன்னால் நாங்கள் ரக்ஷிக்கத்தக்கவர்கள். நாங்கள் ஆயுதங்களை த்யஜித்தவர்கள்; ஶபித்தும் நிக்ரஹிக்காதவர்கள்; கோபத்தை ஜெயித்தவர்கள்; இந்த்ரியங்களை ஜெயித்தவர்கள்;] ஆதலால் எப்போதும் உன்னால்

ரக்ஷிக்கத்தவர்கள்] என்று தண்டகாரண்யவாஸிகளான விப்ரர்கள் ஸ்ரீராமனைக் கண்டு ப்ரார்த்தித்தார்கள். வநங்களில் வஸித்த அவர்களுடைய கதி எவ்வண்ணம் இருந்தது? "ஸோ(அ)யம் ப்ராஹ்மணபூயிஷ்டோ வாநப்ரஸ்தகணோ மஹாந் । த்வந்நாதோ(அ)நாதவத்ராம ராக்ஷஸைர்ஹந்யதே ப்ருஸம் ॥ ஏஹி பஸ்ய ஸரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் । ஹதாநாம் ராக்ஷஸைர்கோரை: பஹூநாம் பஹுதா வநே ।" (ப்ராஹ்மணர் மிகுந்த இந்தப் பெரிய வாநப்ரஸ்தர்களுடைய கூட்டமானது, உனை நாதனுயுள்ளது; நாதனற்றதுபோல் ராக்ஷஸர்களால் மிகவும் கொல்லப்படுகின்றது; வநத்தின்கண் பலவிதமாக கோரர்களான ராக்ஷஸர்களால் கொல்லப்பட்ட ஆத்ம ஸாக்ஷாத்காரம் செய்த பகு முனிகளுடைய சரீரங்களை நீயே வந்து பார்,) என்று அவர்கள் முறையிட வேண்டியிருந்தது.

ஹிரண்யகசிபு ஸ்வப்ருத்யர்களைப் பார்த்து, "ஸூதயத்வம் தபோயஜ்ஞஸ்வாத்யாயவ்ரததாநிந:" [தபஸ், யஜ்ஞம், ஸ்வாத்யாயம், வ்ரதம், தாநம் முதலான க்ரியைகளைச் செய்பவர்களைக் கொல்லுங்கள்.] 'யத்ர யத்ர த்விஜா காவோ வேதா வர்ணாஸ்ரமக்ரியா: । தம் தம் ஜநபதம் யாத ஸந்தீபயத வ்ருஸ்சத' [எங்கே எங்கே த்விஜர்கள், பசுக்கள், வேதபாராயணம், வர்ணாஸ்ரம தர்மாநுஷ்டாநம் இவை காணப்படுமோ, அங்கே அங்கே செல்வீர்கள், கொளுத்துவீர்கள், வெட்டுவீர்கள்.] என்று சொன்னான்.

இப்படிப்பட்ட அநுபவங்கள் பல காலங்களில் ப்ராஹ்மணர்க்கு ஸம்பவித்தன. அவற்றை மறுபடியும் அளிக்க மநுஷ்யர் உண்டாயிருக்கின்றார்கள். அவர்கள் ப்ராஹ்மண த்வேஷத்தையும், வர்ணாஸ்ரம தர்ம த்வேஷத்தையும் செய்யக் குறையில்லை. த்வேஷ ப்ரேரிதர்களாய் பூர்வகால த்விட்டுக்கள் செய்த கார்யங்களைத் தத்காலீநர்கள் செய்வதற்கு ராஜாங்கத்தார் இடந்தர மாட்டார்கள் என்று நம்புகிறோம். ஆனால் அத்ருஷ்ட ப்ரயோஜநமோ த்வேஷத்துக்கும் த்வேஷ கார்யத்துக்கும் துல்ய மென்று ஸாஸ்த்ர நிஸ்சயம்.

* * * * * *

தேச காலங்கள் மாறுதலடைய வர்ணாச்ரம தர்மங்கள் மாறுதலடையலாமோ வெனக்கூடும். அந்தத் தர்மங்களுக்கு உத்பத்தி காலம் யோசிக்கத்தக்கதன்று. வேதமந்த்ரங்களில் அவை சொல்லப்படுகின்றன. மந்த்ரதர்சந காலங்களில் யோசிக்கப்பட்டதாக வெண்ணக்கூடிய ஆதிகாலங்களிலும் அவற்றின் ஸத்பாவம் சொல்லப்படுகின்றது. ஆதலாலன்றோ அவை ஸநாதந தர்மமெனப்படுகின்றன. அவற்றிலும், அவற்றுடன் நடந்து வருகின்ற வைதிகாசாரங்களிலும், ஸ்வரூபத்தில் விகாரம் ஏற்பட்டதில்லை. ப்ரகாரங்களில் ஸம்சயிக்க வேண்டிய அம்சங்கள் இருந்தால் அவ்வம்சங்களை ப்ராஹ்மண பாகங்களிலும் பூர்வ மீமாம்ஸையிலும், தர்மசாஸ்த்ரங்களிலும், ஆக்ஷேப ஸமாதாநங்களுடன் யோசிக்கப்பட்டிருக்கின்றது. ஆதுநிக வைரிகள் அந்தத் தர்மங்களுக்கு ஸ்வரூப நாசத்தை வேண்டுகின்றார்கள். அவர்களில் ஜந்மத்தால் ப்ராஹ்மணரானவர்களிடம் ப்ராஹ்மண்யம் ஈஷத்தும் இலது. கோத்வமின்றிய கோவை நினைக்கவொண்ணாது. ப்ராஹ்மண்யம் விலகிய பிறகு ப்ராஹ்மணன் என ஒருவன் தன்னைக் கொள்ளுதல் அந்யாயம். அநார்யன் ஆர்யனாகமாட்டான். ப்ராஹ்மண்ய தூஷகன் ப்ராஹ்மண ஸமூஹத்தை விலகி வர்த்திக்கவேண்டும். இவர்களும், அப்ராஹ்மணரெனத் தமை ப்ரஸித்தம் செய்துகொண்டு, விப்ரத்வேஷத்தையும் வைதிகாசார நிந்தையையும் செய்பவர்களும், தூஷித்தால் தூஷிக்கட்டும்; த்வேஷித்தால் த்வேஷிக்கட்டும். த்வேஷம் செய்பவரைப்பற்றி விவேகி சோகிக்கக்கடவன். த்வேஷம் செய்பவர் ஸ்வாத்மத்ரோஹிகள் என்று தத்வதர்சிகள் நிச்சயம்.

* * * * * *

ஒருவன் விச்வாஸம் குறைந்துபோன கொள்கைகளையும், க்ரியைகளையும், த்யாகம் செய்வது ஸஹஜம். விச்வாஸம் குறையாது அவற்றைப் பகுமானிப்பவர்களை த்வேஷிப்பது அந்யாயம். ஆதுநிக விப்ரத்வேஷமானது ஸநாதந தர்மாபிமானிகளுக்கு ஒரு ப்ரகாரத்தில் ஹிதம் செய்யக்கூடியதே. அவர்கள் ஸ்வதர்மத்துக்கு ஸம்பவித்திருக்கின்ற அபாயங்களைக் கணிசித்து, அதன் ரக்ஷணவ்யாபாரங்களில் ஜாகரூகர்களாக வேண்டுமென்பது நமது ப்ரார்த்தனை. ஸ்வாராஜ்ய ப்ரயத்நங்களை நாம் ஆக்ஷேபிக்கின்றோ

மில்லை. அர்த்தார்ஜந ப்ரயத்நங்களை நாம் ஆக்ஷேபிக்கின்றோமில்லை. 'ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம் ந்யாய்யேந மார்க்கேண மஹீம் மஹீசா: । கோப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம் லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து ॥' என்கிறபடி நம்மவர் ப்ரார்த்தனை இருந்தது. எல்லா ப்ரஜைகளின் பொருட்டும் க்ஷேமம் ப்ரார்த்திக்கப்பட்டது பூமியின் மன்னர்கள் பூமியை ந்யாயமான மார்க்கத்தில் ரக்ஷிக்கவும், கோக்களுக்கும் ப்ராஹ்மணர்க்கும் நித்யம் சுபம் உண்டாகவும், ஸமஸ்த லோக ஜநங்களும் ஸுகத்தைப் பொருந்தவும் ப்ராஹ்மணர் ப்ரார்த்தித்தார்கள். கோக்கும் ப்ராஹ்மணனுக்கும் தனியே சுபத்தை ப்ரார்த்திப்பானேன்? என்று சிலர் கஷ்டப்படுவார்கள். இவர்கள் முக்யமாக ந்யஸ்த தண்டர்கள்; துன்பத்தை ஸஹிப்பவர்கள். சாப்பாட்டுக்காகக் கோக்கள் ஹிம்ஸிக்கப்படுகின்றன. அந்த ப்ரயோஜநமுமற்று ப்ராஹ்மண த்வேஷம் ஜநிக்கின்றது. ஆதலால் இவர்கள் ஹிம்ஸையின்றி வர்த்திகக வேண்டுமென ப்ரார்த்திக்கப்பட்டது. த்வேஷத்துக்குக் காரணம் இல்லையெனச் சொல்வோம். ப்ராஹ்மண தர்மமே ப்ராஹ்மணமத மாதலால் அந்தத் தர்மங்களைத் துறந்தவனுக்கு ப்ராஹ்மண்யம் இல்லையென்று சொன்னோம். ப்ராஹ்மணன் கேட்டவனோ டெல்லாம் ஸஹபோஜநம் பண்ணமற்போனாலும் கேட்டவனுக்கெல்லாம் பெண்களைக் கொடாமற்போனாலும், அவனுடைய ஆத்மகுணம் உயர்ந்ததே. அவனுடைய குலதர்மங்களுடைய அநுஷ்டாநமின்றி அக்குணங்கள் ப்ரகாசிக்கமாட்டா. ஜந்மமாத்ர ப்ராஹ்மணனிடம் உத்யோக நிமித்தமாக த்வேஷம் கொண்டவர்கள், அவனை ப்ராஹ்மணனென்று சொல்லிக்கொண்டு அப்ராஹ்மண்யம் தமக்கே ஸித்தித்ததாக நினைத்துக்கொண்டு ஸர்வ ப்ராஹ்மண த்வேஷத்தில் ரமிக்கின்றார்கள்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

நம் முன்னோர்களுடைய த்ருவதேச வாஸம்.

த்ருவ நக்ஷத்ரத்தின் நேர் கீழாக இருக்கும் பூப்ரதேசங்களில் ஆறுமாஸ காலம் ஒரே பகலாயும் மற்ற ஆறுமாஸ காலம் ஒரே ராத்ரியாகவும் இருக்கின்றது. நம்மவர் இதைத் தேவர்களுடைய இராப்பகலாக நினைத்து, நமது ஒரு வருஷம் தேவர்க்கு ஒரு நாள் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பூமி பாகம் தான் மேரு எனப்படுகின்றது. அதற்குத் தெற்கே வரவர தொடர்ச்சியாக நீள்கின்ற ஒரே இரவும் ஒரே பகலும் குறைகின்றன. சில விடங்களில் இரண்டு மாஸம் ஒரே பகலாய் இரண்டு மாஸம் ஒரே இரவாய், இவற்றின் முன்னும் பின்னும் நீடித்த ஸந்த்யா காலங்களாய், மிகுந்த மாஸங்களில் 24 - மணிகளடங்கிய இராப்பகல்களாய்க் காலம் வளர்கின்றது. ஸூர்யன் உதிக்குமுன் விடியற்கால மெனப்பட்டது, 10, 20, 30, நாள்கள் வரையில் பூபாகங்களை அநுஸரித்து வளரும்.

இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களை வேதபாகங்கள் வெளிப்படுத்துகின்றபடியால் பூர்வீகர்கள் காலந்தரங்களில் ஸாக்ஷாத்தாகத் தர்சித்த காட்சிகளை, வேதருஷிகள் தம் ஜ்ஞாபகத்தால் வேதபாகங்களில் குறிக்கின்றார்கள் எனத்தகும், தைத்திரீய ப்ராஹ்மணத்தில், 'ஏகம் வா ஏதத் தேவாநாமஹ: யத் ஸம்வத்ஸர:' [வர்ஷமென்பது தேவர்க்கு ஒரு நாள்] என்றும், மநுஸ்ம்ருதியில் 'தைவே ராத்ர்யஹநீ வர்ஷம் ப்ரவிபாகஸ்தயோ: புந: । அஹஸ்தத்ரோதகயநம் ராத்ரி: ஸ்யாத் தக்ஷிணாயநம் ॥' [வர்ஷமென்பது

தேவர்களுக்கு ஒரு அஹோராத்ரி; இவ்வண்ணம் அவை விபாகிக்கப்படுகின்றன. உத்தராயணம் அஹஸ்; தக்ஷிணாயநம் ராத்ரி.] என்றும், மஹாபாரதம் ஆரண்யபர்வத்தில், ‘𑌸𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰 𑌮𑌹𑌾𑌗𑍍𑌰𑌹𑌃 𑌮𑍇𑌰𑍁𑌂 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌸𑌹 𑌸𑍋𑌮𑍇𑌨𑌾𑌭𑍍𑌯𑌵𑍇𑌤𑌃 । 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍁𑌪𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌪𑌹𑌃 । 𑌜𑍍𑌯𑍋𑌤𑍀𑌂𑌷𑌿 𑌚𑌾𑌪𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌨𑌘 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 । 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌗𑌿𑌰𑌿𑌰𑌾𑌜𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 ॥’ [ஸூர்ய சந்த்ரர்களும், எல்லா நக்ஷத்ரங்களும் நிச்சலமாய் நிற்கின்ற மேருவெனும் பர்வத ச்ரேஷ்டத்தை நாள்தோறும் ப்ரதக்ஷிணம் செய்கின்றனர்.] என்றும், ‘𑌸 𑌤𑍇𑌜𑌸𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌗𑍋𑌤𑍍𑌤𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑍌𑌷𑌧𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌭𑌾𑌵𑍋 𑌨 𑌬𑌭𑍂𑌵 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌅𑌹𑍋𑌨𑌿𑌶𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌪𑍍𑌰𑌵𑍀𑌰 ॥ 𑌯𑌥𑌾𑌵𑌤𑌾𑌤𑍍𑌰 𑌵𑌿𑌭𑌵𑌸𑍍𑌯 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍇𑌣𑍈𑌵 𑌸𑌮𑌾𑌨𑌰𑍂𑌪𑌃 ।’ [அந்த உத்தம பர்வதத்தினுடைய தேஜஸ்ஸினுலும், மஹௌஷதிகளுடைய ப்ரபாவத்தாலும், பகல் ராத்ரிகளுடைய விபாகம் யாதொன்றும் ஏற்படவில்லை. அங்கு வஸிப்பவர்களுக்கு இரவும் பகலும் சேர்ந்து ஒரு ஸம்வத்ஸரத்துக்கு ஸமமாயிருக்கின்றது.] என்றும்; சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வசநங்களை டிலக் வித்வான் யோசித்து, மஹாபாரதம் எழுதப்பட்ட காலம் வரையில், நம்முடைய ருஷிகள் வட த்ருவம் எனும் ஸ்தாநத்தினுடைய தோற்றங்களைச் செம்மையாகத் தெரிந்துகொண்டிருந்தார்கள் என்று நிஷ்கர்ஷிக்கின்றுர். இன்னும் அரோரா எனும் தேஜஸ் த்ருவ தேசங்களில் இரவைப் பகல்போலச் செய்கிறது. இது கேவலம் ஸ்மரணத்தால் உண்டாயிருக்க வேண்டும். ருக்வேதத்திலேயே, ‘𑌵𑍇𑌦 𑌮𑌾𑌸𑍋 𑌧𑍃𑌤𑌵𑍍𑌰𑌤𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌪𑍍𑌰𑌜𑌾𑌵𑌤𑌃’ என்று பன்னிரண்டு மாஸங்கள் சொல்லப்பட்டன. இது த்ருவப்ரதேசங்களை முற்றிலும் துறந்தவர்களுடைய அநுபவம்.

ஒரு கம்பத்தின்மீது ஒரு சக்கரத்தைக் குறுக்காக வைத்துச் சுழற்றினுல், அந்தச் சக்கரம் சுழல்வதை யொத்து, நமது தலை

மேல் ஆகாசம் சுற்றுகின்றதென்று த்ருவ ஸமீபவாஸிகள் தான் அறியக்கூடிய விஷயம். 'யோ அக்ஷேணேவ சக்ரியா சசீபி விஷ்வக் தஸ்தம்பப்ருதிவீ உதத்யாம்' [இந்த்ரன் தனது கர்மத்தால் (சக்தியால்) பூமியையும் தேவலோகத்தையும், ரதசக்ரங்களை ரதாக்ஷமானது க்ரஹிப்பதையொத்து, தனித்தனியே ஸ்தாபித்திருக்கின்றான்,] 'ஸஸுக்ரதுஸ் ஸுயுஜம் ஸுபர்ணாம் ஸ்ப்ருதம் சக்ரம் ந வ்ருத்தம் வயமஷ்டாம்' [மஹாவீர்யத்துடன் கூடிய ப்ரஸித்தனான அந்த இந்த்ரன் பஹுதேஜஸ்ஸுகளை (நக்ஷத்ரங்களை) சுழலும்படி செய்கின்றான்; எப்படி யென்றால் ரதஸாரதியானவன் ரதசக்ரங்களைச் சுழற்றி வைப்பதுபோல்,) 'அவம் சேதத்ரா ஸ்கம்பனேன' [ஆகாசத்தில், ஸ்தம்பம் முதலான அவலம்பன மின்றியே, இந்த்ரன், ஸூர்யனை (தேவலோகத்தை) ஸ்தாபித்தார்;] 'ய இமே த்யாவா ப்ருதிவீ ஜஜான, உர்வீ கபீரே ரஜஸீ ஸுமேகே அவம்சே தீர: சச்யா ஸமைரத்' [யாதொரு ஸர்வஜ்ஞன் தனது சுப்பல கர்மத்தால் (சக்தியால்) இந்தத் தேவலோக பூலோகங்களை ஸ்ருஷ்டித்து, விஸ்தீர்ணமாயும், நிச்சலமாயும், சோபனமான ரூபத்துடன் கூடியும் இருக்கும் அந்தரிக்ஷத்தில் அவை நிராதாரமாக நின்று, செம்மையாக ஸஞ்சரிக்கும்படி செய்தானோ,] எனும் ருக்வேத வசனங்களைக்கொண்டு, த்ருவ ப்ரதேசவாஸஸ்மரணம் நம் மந்த்ர த்ரஷ்டாக்களுக்கு உண்டென்று டிலக் யோசிக்கின்றார். ஆகாசமும் அதின்கண் இருக்கின்ற ஜ்யோதிஸ்ஸுகளும் நமது தலையின்மீது ஒரு சக்ரம் சுழல்வதை யொத்துச் சுழல்வதையும், இன்னும் அவை, ஒரு ஸ்தம்பத்தின் மீது நாட்டப்பட்டுச் சுழல்வதை யொத்து, நிராதாரமாகச் சுழல்வதையும், மேற் குறித்த வேத வசனங்கள் சொல்வதாக யோசிக்கின்றார்.

'அமீ ய ருக்ஷா நிஹிதாஸ உச்சா நக்தம் தத்ருச்ரே குஹசித்திவேயு:' [ராத்ரி காலங்களில் நம்மால் பார்க்கப்படுகின்ற யாதொரு இந்த ஸப்தருஷி நக்ஷத்ரங்கள் உச்சியில் ஸ்தாபிக்கப்பட்

டிருக்கின்றார்களோ, ராத்ரி காலங்களில் யாவராலும் தர்சிக்கப்படுகின்ற அந்த நக்ஷத்ரங்கள் பகற் காலங்களில் எங்கே போகின்றார்கள்,] என்கிற ருக்வேத வசநத்தைச் சொல்லி, உச்சியெனப்படுவது தலைமேலே நிற்கும் ஸ்திதியைக் காட்டுகின்றதென்றும், அந்த நக்ஷத்ரங்கள் த்ருவப்ரதேசத்தில் தான் தலைமீது காணப்படுமென்றும் அதை வேத ருஷிகளுடைய முன்னோர்கள் கண்ணால் கண்டிருக்க வேண்டுமென்றும், அக்கதையை ஸ்மரித்தே ருஷிகள் மேலெழுதியபடி ப்ரஸ்தாபித்திருக்க வேண்டுமென்றும், டிலிக் வித்வான் யோசிக்கின்றார்.

'அதாரிஷ்ம தமஸஸ் பாரமஸ்ய, ப்ரதி வாம் ஸ்தோமோ அச்விநாவதாயி, ஆ ஈஹ யாதம், பதிபி தேவயாநை:' [ஓ அச்விநி தேவர்களே! உங்களுடைய ப்ரஸாதத்தால் இந்தத் தமஸ்ஸினுடைய (ராத்ரியினுடைய) எல்லையைத் தாண்டினோம். உங்களைப்பற்றி ஸ்தோத்ரம் பண்ணப்பட்டது. நீங்கள் தேவயாந மார்க்கத்தால் இங்கே வாருங்கள்.] இந்த ருக்வேத வசநத்தின் சப்தங்களின் மேல் ஏற்படும் அர்த்தத்தைப் பார்த்தால், தமஸ் எனும் இருட்டானது மநுஷ்யர்க்குத் துக்காவஹமாய் மிகவும் நீண்டிருந்த தென்றும், அதைக் கடந்து மநுஷ்யர் ஸந்தோஷித்தாரென்றும், அது நீங்கினவுடனே தேவயாநமென்று வேத பாகங்களில் வ்யவஹரிக்கப்பட்ட உத்தராயணம் ஆரம்பித்த தென்றும், அப்போது மநுஷ்யர் ஆரம்பித்த யஜ்ஞங்களைக் குறித்துத் தேவர்களை ஆஹ்வாநம் செய்தார் என்றும், அந்தத் தேவயாநமே தேவர்கள் மநுஷ்ய யோகத்துக்கு வருகின்ற மார்க்கமாக எண்ணப்பட்டதென்றும் ஏற்படுகின்றது. இந்த யோசனைகள் யாவும் த்ருவப்ரதேசங்கட்குத்தான் பொருந்தும்.

மற்றொரு ருக்வேத வசநம், 'ப்ர மே பந்தா தேவயாநா அத்ருச்ரந் அமர்தந்தோ வஸுபிரிஷ்க்ருதாஸ: । அபூது கேதுருஷஸ: புரஸ்தாத் ப்ரதீச்யாகாததி ஹர்ம்யேப்ய:' [தேவயாநம் எனும் தேவர்கள் வருகின்ற மார்க்கங்கள் நன்றாகத்

தர்சிக்கப்படுகின்றன. அந்த மார்க்கங்கள் துன்பமற்றவை; தேஜஸ்ஸுக்களால் ஸம்ஸ்காரமடைந்தவை; அதாவது, அலங்கரிக்கப்பட்டவை. கீழ்த்திசையில் உஷாகாலம் வருகின்றதென ஜ்ஞாபிக்கின்ற வெளிச்சமானது உண்டாகின்றது. அந்த உஷை நமக்கு அபிமுகையாக உந்நத ப்ரதேசங்களினின்று வருகின்றாள்.] என்றிருக்கிறது. இதனுடைய பொருள் த்ருவ ப்ரதேச வாஸிகளுக்குத்தான் அநுபவத்தால் விளங்கும். ராத்ரி அதிக்ரமித்து நீண்டு அஸுகங்களை வ்ருத்தி செய்ததால் உஷா காலத்தை ஆவலுடன் ப்ரதீக்ஷித்திருந்த ஜநங்கள், அதைக்கண்டு ஸந்தோஷித்தார்கள் என்பதும், அந்த நீண்ட தமஸ்ஸே தக்ஷிணாயந மென்றும், பித்ருயாந மென்றும் எண்ணப்பட்டிருக்க வேண்டுமென்பதும், ஜநங்கள் தர்சித்த உஷாகாலத்தினுடைய ப்ரதம வெளிச்சமானது தேவயாந மென்றும் உத்தராயண மென்றும் எண்ணப்பட்டதென்பதும், தேவர்களுடைய ஆராதந ரூபமாக யஜ்ஞங்கள் ஆரம்பிக்கப் போகின்றபடியால் அதுவே தேவர்கள் வருகின்ற மார்க்கங்களாக நினைக்கப்பட்டதென்பதும், மேலெடுத்த வசநத்தைக் கொண்டு யோசிக்கப்படுகின்றது.

த்ருவத்தின்கீழேதான் ஆறுமாஸம் ஒரு பகலும் ஆறுமாஸம் ஒரு ராத்ரியுமாக வ்ருஷம் முடிவு பெறும். இப்படி விஸ்தரித்த இரவும் பகலும் த்ருவத்தைவிட்டு விலக விலகக் குறைகின்றன. த்ருவ ஸமீப ப்ரதேசங்களைக் கடந்தவுடனே இரவும் பகலும் சேர்ந்து அறுபது நாழிகையாக ஒவ்வொரு திநமும் விபாகிக்கப்பட்டு, இப்படிப்பட்ட முந்நூற்று அறுபத்தைந்து திநங்கள் சேர்ந்தது ஒரு வர்ஷம் எனும் வ்யவஹாரம் நிலைபடும். த்ருவத்தினின்று கொஞ்சம் விலகின த்ருவ ப்ரதேசங்களில், வருஷம் முற்றிலும் ஒரு பகல் ஒரு இரவாக முடியாது. நீண்ட ராத்ரியும் நீண்ட பகலும் வரவரக் குறையும். உத்தராயண முடிவில் (Summer solstice) ஒரே பகலாக நீளும். அந்தப் பகல் இரண்டு நாள்களாகவோ, இன்னும் மிகுந்தோ, ப்ரதேசங்கள் த்ருவத்துக்கு ஸமீபமாயிருப்பதற்கு ஏற்றபடி விளங்கும். பிறகு, இரவும் பகலும் சேர்ந்த 60 - நாழிகையுள்ள திநங்கள் உண்டாகும். அப்போது முதலில் பகல்கள் நீண்டும் இரவுகள் குறைந்தும், படிப்படியாக இரண்டினுடைய அளவும் வர்ஷருது முடிவில் (autumnal equinox) ஸமப்படும், பிறகு பகல்கள் குறைந்தும்

இரவுகள் நீண்டும், தக்ஷிணாயந முடிவில் (Winter solstice) விடாமல் நீண்ட இரவும், பிறகு, இரவுகள் பருத்து பகல் குன்றிய நாள்களுடைய விபாகமும், வஸந்த ருதுவுக்கு முன்பாக (Vernal equinox) இரவும் பகலும் ஸமமாயும், பிறகு படிப்படியாக இரவுகள் குன்றிப் பகல் நீண்டு, முடிவில் இரவுகளின்றி நீண்டு வளர்ந்த பகலும் இவ்வண்ணம் வருஷங்கள் கழியும்.

இவ்வண்ணம் தீர்க்கமானதோர் இரவும் தீர்க்கமானதோர் பகலும், அவற்றிற்குப் பொருந்தி, வேதத்தில் கண்டபீடி, 30-நாளளவு விஸ்தரித்த உஷாகாலங்களும், இராப்பகல் அறுபது நாழியாகக் கணக்கிடக்கூடிய ப்ரத்யேக திநங்களும் மற்றொரு ஸங்த்யையுடன் சேர்ந்து வருஷம்முடிந்தால் வருஷம் ஒன்றுக்கு 210 அல்லது 240 நாள்கள் யஞ்ஜாதி க்ரியைகளுக்கு உதவும். அவ்வண்ணம் மாஸங்கள் ஏழு அல்லது எட்டு ஏற்படும்.இப்படிப்பட்ட அநுபவயுக்தமான ப்ரதேச விசேஷத்தைத் தைத்திரீய ஆரண்யகம் ப்ரதம ப்ரச்நம் வெளிப்படுத்துவதாய் எண்ணலாம்; அதில் இந்த வாக்யங்கள் யோசிக்கத்தக்கவை:—“ ஆரோகோ ப்ராஜ: படர: பதங்க: । ஸ்வர்ணரோ ஜ்யோதிஷீமான் விபாஸ: । தே அஸ்மை ஸர்வே திவமாதபந்தி । கச்யபோऽஷ்டம: । ஸ மஹாமேரும் ந ஜஹாதி । யஸ்மிந் ஸூர்யா அர்பிதா: ஸப்த ஸாகம் । தே அஸ்மை ஸர்வே கச்யபாஜ்ஜ்யோதிர்லபந்தே । தாந் ஸூர்ய: ... யாதி வஸந்த ப்ரவிஷ்டா: । தேவா ருதுதா யேவஸு । ”
இவ்வண்ணம், கச்யபருடன் சேர்ந்து ஸூர்யர்கள் எட்டு பெயர் என்றும், தீர்க்ககாலம் இடைவிடாமல் ப்ரகாசிப்பதால் கச்யபர் மஹாமேருவை விடாமலிருக்கின்றூர் என்றும், இராப்பகல் விபாகம் உள்ள திநங்களால் அமைந்த ஏழு அல்லது எட்டு மாஸங்கட்கு ஆதித்ய தேவதைகள் ஏழு அல்லது எட்டு பெயர் என்றும், அவர்களில் மற்ருேர் கச்யபரால் தமது தேஜஸ்ஸை அடைந்தவர்களாய் ப்ரகாசிக்கின்ருர் என்றும் யோசிக்கப் பொருந்தும். இது த்ருவஸமீப தேசங்களின் அநுபவம்.

டிலக்வித்வான், பார்ஸிகளெனப்பட்ட நம் பூர்வீகருக்கு ஸங்கிக்ருஷ்ட ஆர்யஜாதியாருடைய ப்ராமண க்ரந்தங்களையும்

போதிக்கின்றார். அங்கும் "அவர்கள் ஒரு வருஷத்தை ஒரு திநமாக நினைக்கின்றார்கள்" என்கிற வசநம் காணப்படுகின்றது. அவர்களுடைய பரதேவதையான அஹுரமாஸ்டா [அஸுரமா யாதரன்] மநுஷ்யர்க்குள் முதல் ராஜனான இமனைப் (யமனை) பார்த்து, "க்ரூரமான சீதளகாலம் வரப்போகின்றது. அது லோகத்தைப் பனிக்கட்டிகளால் மூடி யாவத் ப்ராணிகளையும் கொன்றுவிடும். ஆதலால் ஸர்வப்ராணிகளுடையவும் ஸ்தாவரங்களுடையவும் ஸந்தாந பீஜங்களை ரக்ஷிக்கக்கூடிய கோட்டை யொன்று பண்ணிக்கொள்" என்று சொன்னதாகவும், அப்போது யமன் ஈச்வரனை நோக்கித் தான் செய்துகொள்ளும் ஆவரணத்துக்கு வெளிச்சம் தரும் ஜ்யோதிஸ்ஸைப்பற்றிக் கேட்டதாயும், ஈச்வரன் அந்த ப்ரதேசத்தில் ஸூர்யாதி ஜ்யோதிஸ்ஸுகள் வருஷத்துக்கு ஒரேதரம் உதித்து அஸ்தமிக்கின்றன வென்று சொன்னதாயும், பார்ஸிகளுடைய மதக்ரந்தங்களில் காணப்படுகின்றன. இன்னும் அவை தேவயாந பித்ருயாநங்களைப்பற்றியும் சொல்கின்றன. பித்ருயாநத்தில் மரணத்தை நம் பூர்வீகர்கள் விரும்பினார்களில்லை. இந்த விச்வாஸம் பூர்வ பாரஸீகர்க்கும் உண்டு. அவர்கள் மதக்ரந்தங்களில், பகு நாள்களோ, மாஸங்களோ, நீண்ட ராத்ரி காலத்தைச் சுட்டிக் காட்டி, அதனடுவில் மரணம் நேர்ந்தால், பிறகு உஷாகாலம் ஸம்பவிக்கும் வரையில், ப்ரேதங்களை வைத்துக்கொண்டு காக்கவேண்டு மென்றும் ஈச்வராஜ்ஞை உரைக்கப்படுகின்றது.

இந்த வசநங்கள் பார்ஸிக ளெனப்பட்ட அஸுரோபாஸகர்களுடைய பூர்வீகர்களும் நம் பூர்வீகர்களைப்போல் த்ருவப்ரதேச வாஸிகளா யிருந்தாரென்றும், அவர்களும் நம் முன்னோர்களும் அந்த தேசங்கள் ஹிமாவ்ருதமாகப் போனபடியால் அவற்றைத் துறந்து தென்னாடுகளில் குடியேறினார்க ளென்றும் காட்டுகின்றன.

பிறகு உஷாகால விவரணமான வேதவசநங்களை டிலக்வித்வான் யோசிக்கின்றார். யோசித்துப் பின் விவரிக்கின்றபடி முடிவு செய்கின்றார்.

வேத ஸம்பந்தமான உஷாகாலம் நீண்டது; அநேக நாள்களளவு விஸ்தரித்தது; அதாவது, அதனுடைய ப்ரதமதர்சந முதல்

ஸூர்யோதய காலம்வரையி 60 நாழிகைகள் கொண்ட பல நாள்கள் சென்றன. த்ருவ ப்ரதேசங்களில் தான் இவ்வநுபவம் பொருந்தும். ஸூர்ய கிரணங்கள் பரவுதலால் கீழ்த்திசையில் இருள் விலகி வெளிச்சம் தெரிய ஆரம்பித்த முதல் ஸூர்யன் தர்சநயோக்யமாவதற்குப் பல நாள்கள் செல்லும். அப்போது பூமியின்கீழே, த்ருவதேச ப்ரதக்ஷிணமாக ஸூர்யன் மநுஷ்யர் கண்களுக்குத் தெரியாமலே சுற்றிக்கொண்டு வருகின்றான். அவனிருக்கு மிடத்திற்கு நேர் மேலாக அவன் கிரணங்களுடைய காரியமாக உஷாகால மென்பது புலப்படும். அப்படிப்பட்ட தேஜஸ்ஸுடன் கூடிய ஆகாச ப்ரதேசம் பல நாள்கள் சுற்றிக்கொண்டேயிருக்கும். அப்படிச் சுற்றுகையில் படிப்படியாக அந்த ஆகாச ஸ்தாநம் வ்ருத்தியாகின்ற வெளிச்சத்துடன் கூடிநிற்கும். முடிவில் ஸூர்யோதயமாகும்.

அந்தக் காலத்துக்கு அபிமாநி தேவதை உஷை யெனப்படுகின்றாள். உஷையெனப்பட்ட ப்ரகாசம் பூமி ப்ரதக்ஷிணம் பலதரம் செய்தபிறகு ஸூர்யோதயமாக வேண்டியபடியால், ஒவ்வொரு ப்ரதக்ஷிணகாலம் ஒவ்வொரு நாளாகக் கணக்காகும். அதை ஒரு உஷையென்று வ்யவஹரித்தால் பல ப்ரதக்ஷிணங்கட்குப் பல உஷாதேவதைகள் ஒருவர்பின் ஒருவராக ஆவிர்ப்பவிக்கின்றார்கள் என்று வேதத்தில் சொல்லப்படுகின்றது. இவ்வண்ணம் முப்பது தேவதைகளை தைத்திரீய ஸம்ஹிதை சொல்லுகின்றது. அவர்களை வேதம் பஹுவசநத்தில் சொல்லுகின்றது. இன்னும் அவர்கள் யாவரும் ஒரே ப்ரதேசத்திலிருந்ததாகவும், ஒருவரோடொருவர் ஒத்து நடந்ததாகவும், அவர்க்குள் எப்போதும் விரோதம் ஜநிக்காதென்றும் சொல்லுகின்றது. அவ்வண்ணம் ஏற்பட்ட முப்பது உஷா தேவதைகள் ஒருவரை மற்றொருவர் தொடர்ந்தே ப்ரகாசித்தா ரென்றும், அவர்கள் நடுவில் வேறு ரூபமான காலாந்தரம் ஸம்பவித்ததில்லை யென்றும், அவர்கள் ஒரே கூட்டத்தார் என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வண்ணம் முப்பது உஷா தேவதைகள் ஒரு சக்கரம் சுற்றுவதுபோல் பூமியை இடைவிடாமல சுற்றினார்க ளென்றும், ஒவ்வொருவரும் கீழ்த்திசையில் ஒரே ஸ்தலத்தில் ஆரம்பித்து அங்கேயே நாள்முடிவில் முடிந்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

குருபரம்பரானுஸந்தாந க்ரமநிரூபணம்.

ப்ராசார்யவம்ஶாநாம் ஸந்தாநக்ரமேண ஹ்ருதி கலயதாம் காச।

தேஶிகாத்ரஹஸ்யம் கிஞ்சித் வ்யுணோதி விஜ்ஞாதவ்யதாம்॥

ஸ்ரீ வேதாந்த தீபிகையின் பிங்களஹு ஐப்பசிமீ ஸஞ்சிகையில் ஸ்ரீமாந் ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி நியமித்திருந்த குருபரம்பராநுஸந்தாந க்ரமத்தைப் பார்த்து, அதில் கொஞ்சம் விப்ரதிபத்தியின்பேரில் இதை எழுதலானேன்.

அதில், இந்த ஸ்வாமி, "ஸ சாசார்யவம்ஶோ ஜ்ஞேயோ பவதி, ஆசார்யாணாமஸாவஸாவித்யாபகவத்த:' என்னும் ரஹஸ்யாம்நாய வாக்யத்தில், 'ஆ' என்பதற்குப் பர்யந்தார்த்தகத்வம் (முடிவு) சொல்லுவது தான் ந்யாயம். ஏனெனில், 'ஆசார்யவம்ஶோ ஜ்ஞேய:' என்று 'ஆசார்ய, வம்ஶ' என்கிற பதத்வய ஸ்வாரஸ்யத்தால் 'ஆசார்யப்ரப்ருதி' என்று பூர்வாவதி ஸ்வத உபஸ்திதமாகிறபடியால், அவ்விடத்தில் 'கிம்ப்ரப்ருதி' என்கிற ஆகாங்க்ஷை ஶாந்தமாகி 'கியத்பர்யந்தம்' என்கிற உத்தராவதி விஷயிகையான ஆகாங்க்ஷையே உதிதையாகிறபடியால், 'ஆகாங்க்ஷித விதாநம் ஜ்யாய:' என்கிற ந்யாயப்படி அந்த ஆகாங்க்ஷா ஶாந்த்யர்த்தம், 'ஆ' என்பதற்கு அவஸாநார்த்தகத்வத்தை ஸ்வீகரித்து ஆசார்யன் முதல் பகவான் வரையில் என்று அர்த்தம் சொல்லுவது தான் உசிதமானது" என்று எழுதியிருக்கிறார். இதில் 'ஆசார்ய', 'வம்ஶ' பதங்களின் ஸ்வாரஸ்யத்தை முதலில் பராமர்ஶிப்போம்.

இந்த வாக்யம் ‘ஸ வாசார்ய வம்ஶ:’ என்கிற பதங்களால் பூர்வப்ரஸ்துதமான ஆசார்ய வம்ஶத்தை அநுவதித்து ப்ரத்யேகம் ஆசார்யர்களுடைய ஸ்மரணபூர்வகம் நமஸ்காரம் வந்தனம் வா அநுஸந்தேயத்வத்தை விதிக்கிறது. ‘ஜ்ஞேய: ஆசார்யாணாம் அஸாவஸாவித்யா பகவத்த:’ என்கிற பதங்களால், இங்கு மேலுள்ள ‘ஆசார்யாணாம்’ என்கிற பதத்தின் ஸந்நிதி ஸ்வாரஸ்யத்தை நோக்கினால், ‘ஆசார்ய வம்ஶ:’ என்கிற இடத்திலும் ‘ஆசார்யாணாம் வம்ஶ:’ என்று விக்ரஹம் சொல்வதே உசிதமாகத் தோன்றுகிறது. ‘ரகுணாம் வம்ஶ:’ என்பதுபோல் அர்த்த வாதமில்லாவிட்டாலும், ராமனுக்கு முற்பட்ட வம்ஶத்தை ராமவம்ஶமென்று சொல்லாமல் ரகு வம்ஶம், இக்ஷ்வாகு வம்ஶம், ஸூர்யவம்ஶம் என்று ப்ரயோகிக்கக் காண்கையாலும், ‘ஸவநாயவம்ஶ்ய:’ – ‘வம்ஶ்ய: வராஹஸ்ய ...’ இத்யாதிகளில்கூட ஸ்தாநகடிதமாகவே வம்ஶ கதநம் ஏற்பட்டிருப்பதாலும், ‘ஆசார்யஸ்ய வம்ஶ:’ என்று விக்ரஹம் சொல்வது லோக ப்ரயோகத்திற்கு ஒட்டாதாகையால், இங்கு ‘வம்ஶ’ பதத்தோடு சேர்ந்த ஆசார்ய ஶப்தம் வம்ஶத்தில் சரமகடகனை ஸ்வாசார்யனை மாத்ரம் சொல்லுகிறதென்றும், ‘ஆசார்யஸ்ய வம்ஶ:’ என்றே விக்ரஹமென்றும், இதனால் பூர்வாவதி ஸ்வத: உபஸ்திதமாகிறதென்றும் சொல்வது ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாகாது. ‘ஆசார்யாணாம் வம்ஶ:’ என்று விக்ரஹம் கொள்ள வேண்டியது முன் சொன்னபடி ஆவஶ்யகமாகையால், ஸ்வாசார்யனுக்குப் பூர்வாவதித்வம் ஸ்வத உபஸ்திதமாகிற தென்பது துர்க்கடமாமன்றோ? இனி, ‘வம்ஶ’ பத ஸ்வாரஸ்யம் யாருக்கென்பதும் எல்லாருக்கும் ஸுவிதிதமாகலாம். ஐஸ்வம் இந்த ஆசார்ய வம்ஶத்திற்குத் தன் ஆசார்யன் உத்தராவதி என்பது ப்ரத்யக்ஷஸித்தமாகையாலும், இதற்கு ஆகாங்க்ஷையிலேயே ஆகாங்க்ஷை உதிக்குமாகையாலும், அதுவே ப்ரமாணாந்தரத்தால் அறியவேண்டியிருப்பதாலும், ‘ஆஹபகவத:’ என்கிற இடத்தில் பகவத் ப்ரப்ருதி என்பதில் தான் ஸ்வாரஸ்யம் தோன்றுகிறது.

இப்பக்ஷத்திற்குக் குருபரம்பராஸாராதிகாரத்தில், 'இவ்வாசார்யர்களில் ஈஶ்வரமுநிகள் பிள்ளை நாதமுநிகள்' என்று ஆரம்பித்து, அநுஸந்தேயமான ஆசார்யவம்ஶத்தை அவரோஹண க்ரமமாக அருளிச்செய்ததும் மிகவும் ஸங்கதமாம். இந்த ப்ரகரணம் இதற்கு ஸங்கதம்போல் தோன்றினாலும், 'முமுக்ஷுவுக்கு ஆசார்ய வம்ஶம் பகவானளவும் செல்ல அநுஸந்திக்கவேணுமென்றோதப்பட்டது' என்கிற ஸ்ரீஸூக்தி நேராக விரோதியாதோவென்னில், இதை நன்றாக கர்ஷணம் பண்ணிப் பார்த்தால் பண்டிதர்கட்கு விரோதம் சொல்வது கஷ்டமாகும். ததாஹி, இங்கு 'வம்ஶ' ஶப்தம் ராஶிவந்யாதி ஶப்தம்போல் விலக்ஷண ஸம்பந்தத்தாலே பரஸ்பர விஶிஷ்டங்களான சில வ்யக்தி ஸமுதாயத்தைச் சொல்லுகிறது. இதற்கு ஆசார்ய பதத்தோடு ஸமாஸம் சொல்லில் கடிதத்வம் ஷஷ்ட்யர்த்தமாகையால், ஆசார்ய கடித வம்ஶமென்று முடிந்தது. 'தேவதத்தன் அவ்வூரளவும் செல்லக் காணவேணும்' என்கிற இடத்தில், 'செல்லுகை' 'காண்கை'யில் அந்வயிக்காமல் தேவதத்தனிடத்தில் அந்வயிப்பது போல், இங்கும் செல்லுகைக்கு வம்ஶத்தில் அந்வயம் சொல்லவேணும். வம்ஶத்திற்குப் பகவானளவும் செல்லுகையாவது, ஸ்வநிரூபித வ்ருத்தித்வ ஸம்பந்தேந ஸமவேதவ்ருத்தித்வம். (தன்னில் கடகனாகப் பகவானைச் செய்து கொள்ளல்) என்று சொல்லவேணும். ஏவஞ்ச அவரோஹண க்ரமாநுஸந்தாநத்திலும் இந்த வம்ஶம் ஸ்வநிரூபித வ்ருத்தித்வ ஸம்பந்தேந பகவத்வ்ருத்தியாகுமாகையால், இந்த ஸ்ரீஸூக்தி எப்படி விரோதிக்கும்? இங்கு, 'பகவானிடத்தில் செல்ல' என்று அருளிச்செய்யாமல், 'பகவானளவும் செல்ல' என்று அருளிச்செய்திருப்பதால், ஸ்வநிரூபித வர்த்தி வ்ருத்தித்வ ஸம்பந்தேந ஸமவேதவ்ருத்தித்வமே இங்கு செல்லுகை என்று சொல்லவேண்டும். ஏவஞ்ச அவரோஹண க்ரமத்தில் பகவான் ப்ரதம கடகனாகையால், இந்த ஸ்ரீஸூக்தி விரோதம் துஷ்பரிஹரமாக ப்ரஸங்கியாதோவென்னில், இதுவும் அநுஸந்தாநம் எப்படியானாலும் இந்த வம்ஶத்

திற்குப் பகவான் ப்ரதம கடகன் என்பதில் விவாதமில்லை யாகையாலும், பகவானுக்கு '[illegible]' என்று இதில் [illegible]த்தையும், '[illegible]' என்று இதில் பூர்வ கடகத்வத்தையும் இவர் அருளிச் செய்திருப்பதாலும், வம்ஶத்திற்கும் பகவானுக்கும் [illegible] ஸம்பந்தமாகாதாகையால் நிபுண நிரூபண மாகாது. ஆசார்ய வம்ஶத்தில் பகவான் ப்ரதம கடகனுனாலும், '[illegible]' என்கிற ஶ்ருதியை அநுஸரித்துப் பகவானுக்கு [illegible]த்தை இந்த ஸ்ரீஸூக்தி ப்ரதிபாதித்தால் பாதகமென்னென்னில், இந்த ஸ்ரீ ஸூக்திக்கு [illegible] மிகவும் ஸாதகமாம். ஆகையால் இந்த ஸ்ரீஸூக்தி ஏகாந்தேந ஒருவருக்கே ஸாதகமென்று சொல்ல முடியாது.

இந்த ஸ்ரீஸூக்திக்கு [illegible] பரத்வத்திலேயே நோக்கென்றாலும் ஒருவித பாதகமுமில்லை. [illegible], ஸ்ரீ தேசிகன் இவ்வதிகாரத்தில் ஆசார்ய வம்ஶம் அநுஸந்தேயமென்று ஸ்தாபிக்கக் கருதி, முதலில் 'இன்பத்தில்' என்கிற பாசுரத்தில், எல்லா முமுக்ஷுக்களுக்கும் ஆசார்யவத்வம் ஆவஶ்யகம் என்பதில் தர்மஜ்ஞஸமயரூப ப்ரமாணத்தைக் காட்டி, அதில் ஸ்ம்ருதி ரூப ப்ரமாணத்தை '[illegible]' என்கிற ஶ்லோகத்தால் ப்ரதர்ஶிப்பித்தார். பின்பு இப்படி ஆசார்யவத்வம் மோக்ஷகாரணமென்கையாலும், '[illegible]' இத்யாதி ப்ரமாணங்களாலும், ஸ்வாசார்யன் த்யேயனுனாலும் ஆசார்ய வம்ஶத்தால் உபகாரம் தானுண்டோ? ஆசார்யவம்ஶம் அநுஸந்தேயம் என்பதில் ப்ரமாணம் தானுண்டோ? என்கிற ஶங்கையின்பேரில் '[illegible]' என்கிற ஶ்ருத்யர்த்தத்தைத் திருவுள்ளத்திற் கொண்டு, 'முமுக்ஷுவுக்கு ஆசார்ய வம்ஶம் .... ஓதப்பட்டது' என்கிற வாக்யத்தை அருளிச்செய்தார். இதனுல் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் காரண

மான ஆசார்யன் அநுஸந்தேயனானாற்போல் பரம்பரயா காரண மாகையினாலே ஆசார்ய வம்ஶமும் அவஶ்யாநுஸந்தேய மென்று சொல்லப்பட்டது. இதற்கு ஸூசகம் ஶ்ருத்யநுக்தமான முமுக்ஷுவுக்கு என்கிற பதம் தனேச்சை யுள்ளவன் ராஜ ஸேவை பண்ணவேணு மென்றால், அது தந ப்ரயோஜக மென்று கிடைப் பதுபோல், முமுக்ஷுவுக்கு (மோக்ஷேச்சையுள்ளவனுக்குக்) குரு பரம்பரையை அநுஸந்திக்கவேணு மெனில் மோக்ஷ ப்ரயோஜ கத்வம் அநுஸந்தாநத்தில் கிடைக்குமிறே.

இங்கிப்படித் தன்னுடைய உபகாரகத்வத்தை முன்னிட்டு ஸங்கோசத்தாநமாகையாலும், அந்த உபகாரகத்வம் பரம்பரயா பகவத் பர்யந்தம் செல்லுகையாலும், அதை அநுஸரித்து, 'ஆசா ர்ய வம்ஶமும் பகவானளவும் செல்ல அநுஸந்திக்கவேணுமென்று ஓதப்பட்டது' என்று ஶ்ருத்யர்த்தத்தை அருளிச்செய்தார். ஶ்ருதியில் 'ஜ்ஞேய:' என்கிற பதத்திற்கு 'அறியவேண்டியது' என்பது பொருளாயிருக்க, ஜ்ஞாநம் அநுஸந்தாநார்த்த மாகை யால், 'அநுஸந்திக்கவேணுமென்று ஓதப்பட்டது' என்று ஆர்த் திகமான அர்த்தத்தை அருளிச்செய்தாப்போலே, 'வம்ஶ' வடி ஸம்பந்த்த சு - பதத்திற்கு ஆரம்பார்த்தகத்வம் ஸ்வரஸ மானாலும், ப்ரக்ரமாநுகுணமாக 'பகவானளவும் செல்ல' என்று, 'ஆஸவத:' என்கிற வாக்யத்தின் ஆர்த்திகார்த்தத்தை அருளிச் செய்தா ரென்று சொன்னால் ஒருவித பாதகமுமில்லை யாகையா லேயிறே 'விதிக்கப்பட்டது' என்று சொல்லாமல் 'ஓதப்பட் டது' என்று அருளிச்செய்தார். பகவான் முதற்கொண்டுள்ள ஆசார்ய வம்ஶத்தைத் திருப்பினால் பகவத் பர்யந்தத்வம் அர்த் தாத் ஸித்திக்குமிறே. 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்', 'தேவாதிநா யக ஸௌலப்ய தஶம வத்ஸலம்' இத்யாதிகளில் அவரோஹண க்ரமமும், 'மம ஸ்வாமிநே ஸர்வஸ்வம்', 'என்னுயிர் தந்தளித் தவரை' இத்யாதிகளில் ஆரோஹண க்ரமமும் சொல்லப்பட்டிரு ப்பதால், இவை எந்த ஶ்ருதியில் விதிக்கப்படுகின்றன என்னும்

ஆகாங்க்ஷா நிவ்ருத்யர்த்தமாக ப்ரணவத்தில் ஶேஷத்வாநுஸந்தானமும் பஹுவசனங்கள் ஶாப்திகமாகவும் ஆர்த்திகமாகவும் ப்ரதிபாத்ய மென்பதுபோல், 'ஸர்வாயபூர்வம்' என்கிற வாக்யத்திலும் ஶாப்திகமாகவும் ஆர்த்திகமாகவும் இரண்டு விதாநுஸந்தாநமும் விதிக்கப்படுகிற தென்பதில் ஒருவித பாதகமும் இல்லை. அந்யதராநுஸந்தாநம் ஆர்த்திக மாகையால் வாக்ய பேத ஶங்காவகாஶமும் இல்லை. ஈஶ்வர ந்யாஸ விம்ஶதியின் 10-வது ஶ்லோக வ்யாக்யாநத்தில், 'ஸாபேக்ஷத்வம் ப்ரவர்த்தேத ஸ்ருஷ்டிம் ஸமீக்ஷ்யாத்: - ந்யாஸதந்த்ரவாயிகா - விஷய ஸ்ஹாஸ்ஹயாயி காரயோபிஷ்ட்டு ஸூவித ந்யதயோக்ஷர விரோயாக' என்று அருளிச்செய்த ந்யாயத்தாலே, தேசிகன் ஒருவிதமான அர்த்தத்தை அவ்வோப்ரகாணத்தை அநுஸரித்து அருளிச்செய்த மாத்ரத்தாலேயே அந்த ஶ்ருதிக்கு வேறு அர்த்தம் இல்லையென்று ஸித்தாந்திப்பது ந்யாயமாகுமோ? ஈடு யாவத் பாஷ்யகார ஸம்ப்ரதாயஸ்தர்கள் எல்லாரும் ஸம்ப்ரதாய வைஷம்யம் அற வேதாந்த ரஹஸ்யார்த்தங்களைப் போதித்துக்கொண்டிருக்கும் ப்ரபந்தாநுஸந்தாந காலங்களில், 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்கிற ஶ்லோகத்தால் அவரோஹண க்ரமமாகவே ஆசார்யவம்ஶத்தை அநுஸந்தித்துப் போருகிறார்கள் என்பதில் ஒருவருக்கும் விப்ரதிபத்தி சொல்ல முடியாது. இந்த அவிமீத ஶிஷ்டாசாரத்தால் ஒரு மூல ஶ்ருதியை அநுமிக்கவேண்டும். அது வேறு வாக்யம் தென்படாமையால், இந்த ரஹஸ்யாம்நாய வாக்யமாயிருந்தால் ஒருவித பாதகமும் சொல்ல முடியாது. ஆசார்யனும் ஶிஷ்யனும் சேர்ந்த காலத்திலும் சேராத காலத்திலும் ப்ரபந்தத்தை அநுஸந்திக்கும் போதெல்லாம் இந்த ஶ்லோகத்தை யாவரும் அநுஸந்திக்கக் காண்கையால் இது வம்ஶகதநம் என்று சொல்வதும் ந்யாயமாகாது.

தேவநாயக பஞ்சாஶத்தில் அவரோஹண க்ரமேணாநுஸந்தாநத்தையும், ஸ்ரீதேசிகன், "ப்ரபத்யே நாயகஞ்சைவ ப்ரபத்யே

பரிவாராம் ஸ்ரீதராம் ஸதாராம் வகுளபூஷண நாதமுநிம் மௌனிவர்யாந் |
ராமாநுஜம் ப்ரஹ்ருஷ்டஹ்ருதிஹ் ஸபரிஷத்கம் ஸாத்மஜம் ஸோபகாரம் ஜகதி
மஹாபுருஷம் ஸம்ப்ரபத்யே ||" என்று அநுஷ்டித்துக் காட்டினர். இதுவும் உடையவருடைய ஸ்தோத்ரம் அன்றாகையால், இதை அந்யதாவாக நிர்வஹிப்பது அஶக்யமாகும். ஸம்ஸாரங்க ஸ்ரீஸ்வாமிநா அநுஸந்தித்தால் அவரோஹண க்ரமமென்றும், ப்ரத்யேகம் அநுஸந்தித்தால் ஆரோஹண க்ரமமென்றும் சிலர் சொல்லக் கேட்கிறோம். அப்படியாகில் ரஹஸ்யாம்நாய வாக்யத்தை அடியொற்றி அருளிச்செய்த 'ஸஹமவத்த் ப்ரயிதாம்' என்கிற ஶ்லோகத்திலும் அவரோஹண க்ரமாநுஸந்தாநமே சொல்லவேண்டுமாகையால், அந்த ரஹஸ்யாம்நாய வாக்யத்திற்கு அவரோஹண க்ரமாநுஸந்தாந விதாயகத்வமும் ஸ்ரீதேசிகனுக்குத் திருவுள்ளமென்பதில் ஸந்தேஹிக்க வேண்டியதில்லை. இந்த 'லக்ஷ்மீநாய ஸமாரம்பாம்' என்கிற ஶ்லோகாநுஸந்தாநத்தை ஸ்வாபிப்ரேதார்த்த ஸாதகமாக யதிராஜஸப்ததி வ்யாக்யாதா எழுதியிருப்பதாக எடுத்துவிட்டு, இந்த ஶ்லோகாநுஸந்தாநத்திற்குக் கதி சொல்லாமலே இதனால் உத்தோத்தரங்களாயினவென்று, இந்த ஸ்வாமி ஸாதித்திருப்பதைப் பார்த்தால் மநஸ்ஸில் பட்ட அர்த்தத்தை மழுமழுப்பினதுபோல் காண்கிறது.

இந்த ஸ்வாமி எடுத்த ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா கட்டம் பகவத்த்யாநத்தின் கர்த்தவ்யதையை ஸாதிக்கிற ப்ரகரணமாகையால் யதிராஜ ஸப்ததியில் ஆரோஹண க்ரமமாகச் சென்று உடையவரை ஸ்தோத்ரம் பண்ணுவது அஶக்யமானாப்போல், அங்கும் அவரோஹண க்ரமேண வந்து பகவத்த்யாநம் பண்ணுவது அஶக்யமாகையால் ஆரோஹண க்ரமேணாநுஸந்தாநத்தையும் அதற்கு அநுகுணமான ப்ரமாணங்களையுமே அங்கு அருளிச்செய்தார். 'ஸவாவாயபூர்வ: ஶ்ருதி:' என்கிற ஶ்ருதிக்கு முன் சொன்னபடி உபய விதாநுஸந்தாந பரத்வ முண்டாகையால் அங்கு இந்த ஶ்ருதியை எடுத்தது இதரர்களுக்குப் பாதகமாகமாட்டாது. பக

வத் ப்ரபதந த்யாநாதி காலங்களில் ஆரோஹண க்ரமேணநுஸந் தாந மென்பது ஸர்வாப்யுபமத விஷயம். வ்யாக்யாதாக்களுடைய ஸ்ரீ ஸூக்திகளில் ஒவ்வொரு விஷயங்களில் உபயவாதிகளுக்கும் விப்ரதிபத்தியிருப்பதால், நமக்கு முற்பட்டவர்கள் என்பதைக் கொண்டே, ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்தியில்போல் அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளிலும் ஸர்வாத்மநா ப்ராமாண்யங்கொள்ள ஒருவருக்கும் முடியாது. அவைகளின் விரோதமும் ஒருவருக்கும் பாதக மாகமாட்டாது.

இந்த ஸ்வாமி, "குருபரம்பராநுஸந்தாநம் வேறு; குரு பரம்பரா ப்ரகாஶநம் வேறு; அதில் குருபரம்ராநுஸந்தாநம் ஶிஷ் யனுடைய க்ருத்யமே; அது ஆரோஹண க்ரமத்தையே யுடை யது; அது தான் ஶ்ரீதாவஹ முநிநா ஸமர்ப்பிக்கப்பட்டது; இரண்டாவது சொன்ன குருபரம்பராப்ரகாஶநம் ஆசார்யக்ரு த்யமே; அது ஸத்வித்யோபதேச காலத்தில் செய்யவேண்டியது; அது அவரோஹண க்ரமத்தையேயுடையது; அதைத் தான் முண்டகோபநிஷத் ப்ரப்ருதிகளும் ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்திலு ள்ள, 'தானிப்படிப் பெற்ற ரஹஸ்யத்ரய ஸாரார்த்தமான மஹா தநத்தை முன்னிலதிகாரத்தில் சொன்னபடியே, உசிதஸ்தாநம் அறிந்து ஸமர்ப்பிக்கும்போது, ‘இதஞ்ச பூர்வமாஹ ஸ்ம தக்ஷாத்யைர்முநிஸத்தமை: । ப்ருஷ்ட: ப்ரோவாச பகவாநப்ஜயோநி: பிதாமஹ: ॥ தைஶ்சோக்தம் புருகுத்ஸாய பூபுஜே நர்மதாதடே । ஸாரஸ்வதாய தேநாபி மம ஸாரஸ்வதேந ச ॥’ என்று ஸ்ரீ பராஶரமஹர்ஷி ஸ்ரீமைத்ரேய பகவானுக்கு அருளிச்செய் தாப்போலே குருபரம்பரையை ப்ரகாஶிப்பித்துக்கொண்டு தன் க்ருதஜ்ஞதையையும் அர்த்தத்தின் சீர்மையையும் தோத்த உபதே சிக்கவேணுமென்கிற ஸ்ரீ ஸூக்தியும் ப்ரதிபாதிக்கின்றன" என்று சொல்லியிருப்பதையும் கொஞ்சம் விசாரிப்போம்.

குருபரம்பரா ப்ரகாஶநமாவது, பரனுக்குக் குருபரம்பரா ஜ்ஞாந ஜநகமான வ்யாபாரம். குருபரம்பாநுஸந்தாநமாவது, குருபரம்பரா விஷயகமாய்த் தனக்கு உண்டாகும் விலக்ஷண

ஜ்ஞாநம். ததா ச, இதில் தன்னுடைய ஜ்ஞாந ரூபமான அநுஸந்தாநமில்லாமல் பரனுக்கு ப்ரகாசநம் பண்ண முடியாதாகையால், ப்ரகாசநம் உள்ள விடத்தில் ப்ரகாசிப்பிக்கிறபடி அநுஸந்தாநமும் ஸித்தமாகையாலும், ஆசார்யனுக்கு ஆசார்யத்வாவஸ்தையிலேயே, 'யதா ஹ்ருத்யம் ஸம்ப்ரதிஷ்டிதம் ரஹஸ்யம் ஶாஸ்த்ரவித்ருதி | ததா ததா ந ஸம்யக் தத்ப்ரவர்த்தநம் வரம் வரம்' என்கிற ப்ரமாணத்தாலே அநுஸந்தாநம் விஹிதமாகையாலும், ஆசார்யனுக்கும் அநுஸந்தாநம் ஸித்தமாயிருக்க, இந்த ஸ்வாமி இதை ஶிஷ்யக்ருத்யமென்று அறுதியிட்டதற்குக் காரணம் தெரியவில்லை. ஸ்ரீ தேஶிகனும் இந்த அநுஸந்தாநத்தை விட்டு ப்ரகாஶநம் இராதாகையால், ப்ரகாஶநத்துக்குச் சொன்னதெல்லாம் அநுஸந்தாநத்திற்கும் உண்டென்று திருவுள்ளம்பற்றியே குருபரம்பரா ஸாராதிகாரத்தில் முதலில் குருபரம்பராநுஸந்தாநத்தை ஸாதித்துப்பின்பு, பூர்வப்ரஸ்துதமில்லாத குருப்ரகாஶநத்திற்கு அகரணேப்ரத்யவாயத்தையும் பக்திபூர்வகத்வத்தையும், 'குரூணாம் ச ப்ரகாஶயேத்' என்கிற ஶ்லோகத்தாலும், 'குருவை யொருவன் ப்ரகாஶிப்பிக்கிறதும்' இத்யாதி வாக்யங்களால் அருளிச்செய்தார். இதனால் ப்ரகாஶநாகரணே ப்ரத்யவாயம் போல் ஸ்வாநுஸந்தாநாகரணே ப்ரத்யவாயம் உண்டென்றும், அநுஸந்தாநத்திற்கும் பக்திபூர்வகத்வம் ஸித்தமென்றும் திருவுள்ளம் ஸூசிதமாகிறது.

இந்தத் திருவுள்ளத்தை, 'ப்ரகாஶநத்திற்குப் பக்திபூர்வகத்வம் சொல்லவே, ப்ரகாஶநம் அநுஸந்தாநத்தை விட்டிராமையால், அநுஸந்தாநத்திற்குப் பக்திபூர்வகத்வம் அர்த்தாத் ஸித்தமிறே என்று, 'குரூணாம் ச ப்ரகாஶயேத்' இத்யாதி வாக்யத்திற்குத் தாத்பர்யம்' இத்யாதி வாக்யங்களாலே ப்ரதம வ்யாக்யாதாவான ஸாரதீபிகாசார்யர் வெளியிட்டார். இது, 'குரூணாம் ச ப்ரகாஶயேத்' என்பதற்குமேல், இவ்வதிகாரத்தில் ப்ரகாஶநத்தையும் அநுஸந்தாநத்தையும் பர்யாயம்போல் சொல்லுகிற ஸ்ரீஸூக்திகளையும் அங்குள்ள வ்யாக்யாநங்களையும் பராமர்ஶிப்பார்க்கு நன்கு விஶதமாம்.

ஏவமேவ, ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்தில், ஆசார்யனுக்கு ஶிஷ்யனைக் குறித்து ரஹஸ்யார்த்தோபதேஶ காலத்தில் சொன்ன குருபரம்பராப்ரகாஶநம் குருபரம்பராநுஸந்தாநத்திற்கும் உபலக்ஷணமாகையால், ஆசார்யனுக்கு ப்ரகாஶந க்ரமேணநுஸந்தாநமும் ஸித்தம். ஆசார்யனுடைய அநுஸந்தாநம் அவரோஹண க்ரமமாகில் [illegible] ந்யாயேந ஶிஷ்யர்களுக்கும் தத்காலத்தில் அவரோஹண க்ரமமாகவே அநுஸந்தாநமும் ஸித்தமாகுமிறே. இப்படி அநுஸந்தாநம் ப்ரகாஶந துல்ய யோகக்ஷேமம் என்கிற திருவுள்ளத்தாலேயே குருபரம்பரா ஸாராதிகாரத்தில் ஆரோஹண க்ரமேணநுஸந்தாநம் சொன்னது இந்த ஶிஷ்ய க்ருத்யாதிகார ஸ்ரீஸூக்தியோடு விரோதிக்கும் என்றெண்ணி, இந்த ஸ்ரீஸூக்தி வ்யாக்யாந ஸாராஸ்வாதிநியில், 'இதனாலே ஆசார்யனுக்கு ரஹஸ்யோபதேஶ காலத்திலே [illegible] இன்னார் இன்னாருக்கு உபதேஶித்தார்களென்று க்ரமமாகக் குருபரம்பரா ப்ரகாஶநம் கர்த்தவ்யம்' என்றும், 'தான் ஸ்வயமாக ரஹஸ்யத்ரயார்த்தாநுஸந்தாந ரூப விமர்ஶ காலத்திலே குருபரம்பரா ஸாரோக்த க்ரமமாக ஸ்வாசார்யமாரப்ய பகவத் பர்யந்தம் குருபரம்பராநுஸந்தாநம் பண்ணவேணுமென்றும் கருத்து வெளியிடப்பட்டது' என்று இரண்டுக்கும் கால பேதத்தை ப்ரதர்ஶநம் பண்ணி விரோத பரிஹாரத்தை அருளிச்செய்தார். இங்கு, ஆசார்யனுக்குக் கர்த்தவ்யமென்றும், பண்ணவேண்டுமென்றும் (ஸ்ரீதேசிகனுடைய) கருத்து வெளியிடப்பட்டது என்று அந்வயம். அவரோஹண க்ரமேண ப்ரகாஶநமும் ஆரோஹண க்ரமேணநுஸந்தாநமும் ஒருவனுக்கே ஏககாலத்தில் இருந்தாலும் விரோதமில்லாமலிருக்க, இப்படிகாலபேத வ்யவஸ்தை பண்ணினதால் ப்ரகாஶநத்துக்குச் சொன்னது அநுஸந்தாநத்திற்கும் உபலக்ஷணம் என்கிற திருவுள்ளம் ஸூசிதமாகிறது. இங்கு, 'தான் ரஹஸ்யத்ரயார்த்தாநுஸந்தாந ரூப விமர்ஶ காலத்தில்' என்பதே போதுமாயிருக்க, 'தான் ஸ்வயமாக' என்கிற அதிக பத ப்ரயோகத்தால் ஶிஷ்யனில்லாமல் தான் அநுஸந்திக்கும்

போதுதான் ஆரோஹண க்ரமமென்று ஸூசிதமாகிறது. இதனால் ப்ரகாசநம் ப்ரதம நிநமாத்ர க்ருத்யம் என்பார்களுக்கும் ஸமாதாநம் சொல்லப்பட்டதாம். 'ஊந வாயிஊநி பெஓபோஹ ஸாம்கொரம்வாஊநீக்ஷிணாம்' என்கிற ந்யாயமும் அவர்களுக்கு விரோதமாம்.

இந்த ஸாராஸ்வாதிநி பங்க்தியின் அர்த்தத்தையே வேறாக எண்ணி, இந்த ஸ்வாமி, ப்ரகாசநத்தை ஆசார்யனுக்கும் அநுஸந்தாநத்தை ஶிஷ்யனுக்கும் பங்கிட்டுக் கொடுத்தாரென்று தோன்றுகிறது. அப்படியானாலும் ஆசார்ய ஸாந்நித்யபத்தை வ்யவச்சேதிக்கிற 'ஸ்வயமாக' என்கிற அதிக பதத்தால் காலக்ஷேப காலத்தில் அவரோஹணக்ரமமாகவே அநுஸந்தாநம் ஸூசிதமாகிறது. இங்கு, 'தான்' என்பது ஶிஷ்யபரமானால் ஸ்வரஸமா? ஆசார்ய பரமானால் ஸ்வரஸமா? என்பது இதன் மூலத்தை நன்கு பராமர்சிப்பார்க்கும் ஸ்வரஸாந்வய ஶக்தியுள்ளவர்க்கும் விஶதமாம். ஒதாவதா, ஸாராஸ்வாதிநியில் அருளிச்செய்தபடி, காலக்ஷேபகாலத்தில் அவரோஹண க்ரமேணாநுஸந்தாநமும், இதர காலங்களில் ஆரோஹண க்ரமேணாநுஸந்தாநமும் வ்யவஸ்திதங்களென்று சொல்லுவதே ஸர்வப்ரமாண விருத்தமாமென்று நிஶ்சயிக்கப்படுகிறது.

இவ்வளவு சர்ச்சைக்கும் பலமாக அடியேன் பண்ணுவதோர் விஜ்ஞாபநம் உண்டு. அதாவது 200-வருஷத்திற்கு முன், நமக்கு மூலம் தெரியாமல் ஸம்ப்ரதாயங்களில் ஏற்பட்ட ஸ்வல்ப வ்யத்யாஸத்தைக் குறித்து, 'கூஜா நயஹாஞ', என்கிற ஶ்லோகத்தினுடையவும் 'தகொவா ஊகஹா நதகஹா' இத்யாதி ஸ்ரீஸூக்திகளுடையவுமான அர்த்தங்களை நன்கு அறிந்தவர்களாயும் பண்டிதாபிமாநிகளுமான நாம் இப்படி சர்ச்சை பண்ணுவதால், ப்ரயோஜநம் ஸ்வல்பமாயும் வைஷம்யம் அதிகமாயும் ஆகிறதோடு கொஞ்சம் விஷயம் தெரிந்த லௌகிகர்கள் நம்மை ஸ்வல்ப விஷயத்திலும் அதிக ஆக்ரஹமுள்ளவர்களென்று நினைக்கவும் இடமுண்டாகிறதாகையால் இனி இவ்வித சர்ச்சையை நிறுத்தி, இப்பத்ரிகையைப் படிப்பவர்களுக்கு வைராக்ய பக்தி வர்த்தகங்களான சர்ச்சையையே பண்டிதர்கள் செய்யவேண்டுமென்பதாம்.

ஓர் நிபுண நிரூபகர்.

ஸ்ரீ:.

வேதாந்த ஸங்க்ரஹம்.

(தொடர்ச்சி.)

இப்படிப்பட்ட பகவானை வெளிக்கண்ணால் பார்க்கமுடியாது. 'நவக்ஷுஷா ஗்ருஹ்யதெ-நாபி வாசா' என்று மலம் அற்ற மஹாபரிசுத்தமான உட்கண்ணுக்குத் தெரியலாம். பகவானுக்கு ப்ருதிவி அப்பு தேஜஸ் வாயு ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலுண்டான ப்ரக்ருதி பரிணாமமான சரீர ரூபம் கிடையாது. ஆனால் சாந்தோக்யத்தில் 'ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷ: । தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ । ...... தஸ்யொதிதி நாம ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித: ॥' [இவன் ஸூர்யனுக்குள்ளிருப்பவனாய், ஸர்வேஸ்வரனாய், ஸர்வபுருஷார்த்தத்தையும் கொடுப்பவனாய், ஒருவிதமான பாப ஸம்பந்தமு மில்லாதவனாயிருப்பவன்; ஒப்பற்ற திவ்யமான பொன்மேனி உடையவனாய்யோகிகளுக்குத் தர்சநம் அளிக்கின்றான். ஆழமாகிய பெரும் ஜலத்தில் நன்றாய் உண்டாகியதும், மிகவும் பரிசுத்தமாகக் கிளம்பிய கொடியின் மீதுள்ள (அதாவது) பெருத்த தண்டோடு கூடியதும், சூரிய கிரணங்களால் விகஸிப்பிக்கப்பட்டதுமான தாமரை மலரின் தளம்போன்று, நிர்மலமாய் விஸ்தரித்திருக்கின்றன அவனது திவ்விய கண்கள்] என்றும், ஸ்வேதாஸ்வதரத்தில் 'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்' [ஸத்வ, ரஜஸ், தமஸ்ஸான முக்குணமுடைய ப்ரக்ருதி ஸம்பந்தம்

பகவானுடைய திருமேனி.

தட்டாத மஹாதேஜஸ்ஸான ஒரு அத்யாஸ்சரியமான ரூபத்தை யுடையவன்] என்றும் தைத்திரீயத்தில் ‘𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃’ [மின்னல்போன்ற ஒளியுள்ள ரூபத்தை யுடையவன்] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி மூப்பு இறப்பு இல்லாதவனாகவும் பாப ஸம்பந்த மில்லாதவனாகவும், தன்னுடைய இச்சையால் எதையும் முடிப்பவன். அவன் ஸங்கற்பத்தையும் இச்சையையும் உண்மையாகவே நடத்துகிறவன் என்றும், சாந்தோக்ய (முன்குறித்த) வாக்யத்தாலும், முண்டகோபநிஷத்தில் ‘𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌃’ [எல்லாமறிந்த ஸர்வஶக்தன்] என்றும், ஶ்வேதாஶ்வதரத்தில் ‘𑌪𑌰𑌾𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌵 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨 𑌬𑌲𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌚’ [ஸ்வபாவமாகக் கர்மத்துக் குட்படாமல் அளவிறந்த ஜ்ஞாநம் பலம் முதலிய விசித்ரசக்தியை உடையவன்] என்றும், எப்படி அவனுக்கு இந்த கல்யாண குணங்களுண்டோ அப்படியே ஒரு அத்யாஸ்சர்யமான ப்ராக்ருதி பரிணாம மல்லாத திவ்யமான ரூபமும் உடையவனாக ஏற்படுகின்றது. மஹாயோகிகளான பக்தர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு அவன் மஹாக்ருபை கூர்ந்து ஒரு திவ்யரூபத்தைப் பரிக்ரஹித்துத் தர்ஶநம் கொடுக்கிறான். ஸ்ரீ பாஷ்யகாரருக்கு முற்பட்ட நம் பூர்வாசார்யரில் முதல்வரான ஸ்ரீமந்நாதமுனிகளுக்கும் முற்பட்ட த்ரமிடபாஷ்யகாரராலும், அவருக்குப் பின் இருந்த வாக்யகாரர் என்பவராலும், ‘𑌨 𑌵𑌾 𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑌾𑌂𑌜𑌸𑍍𑌯𑍇𑌨𑍈𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍃𑌜𑍋 𑌰𑍂𑌪𑌂......... 𑌨 𑌹𑍍𑌯𑌰𑍂𑌪𑌾𑌯𑌾𑌃 𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌃 𑌰𑍂𑌪𑌮𑍁𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑌥𑌾𑌭𑍂𑌤𑌵𑌾𑌦𑌿 𑌹𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 .... 𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍.........𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌾𑌚𑍍𑌚’, ‘𑌤𑌸𑍍𑌯𑌾 𑌉𑌪𑌾𑌸𑍍𑌯𑌾𑌯𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾 𑌰𑍂𑌪𑌮𑍁𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇’, ‘𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌵𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑌂 𑌵𑍇𑌦𑌿 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌕𑍃𑌤𑌕𑌮𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑌚𑍍𑌚𑍇𑌤𑌨𑌾𑌨𑌾𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌤𑍍’ என்று முன் சொன்ன சாந்தோ

க்ய ஶ்வேதாஶ்வதர வாக்யங்களைக்கொண்டு இந்த மஹா அத்புதமான ரூபம் கேவலம் அநித்யமல்ல; அவித்யையாகிற மாயையாலுமல்ல; உபாஸகனுகிற பக்தர்களிடத்தில் பகவானுக்குண்டான க்ருபையின் கார்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ரூபம்போல பக்தர்களை அநுக்ரஹிக்கவே பகவான், ராமக்ருஷ்ணுதி அவதாரங்களில் ரூபத்துடன், 'அஜாயமாநோ பஹுதா விஜாயதே' [பிறப்பில்லாதவன் அநேக விதமாய் அவதரிக்கிருன்.] பகவத்கீதையில் 'அஜோபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோபி ஸந் ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா' [பிறப்பு இறப்பில்லாத ஸர்வேஶ்வரனுகிற நான், என்னுடைய, வேறெருவருக்குமில்லாத, அலாதியான பாபஸம்பந்தமற்ற ஒருருவை யடைந்து என் ஸ்வபாவம் சிறிதும் மாருமல் ஆஶ்சர்ய சக்தியால் அவதரிக்கிறேன்] என்றும், 'பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச து³ஷ்க்ருதாம் | த⁴ர்ம ஸம்ஸ்தா²பநார்தா²ய ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³', 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்', பகவானையே தாரக போஷண போக்ய வஸ்துவாய் வைத்துக்கொண்டு அவனைக்கண்டு அல்லது தரியேன்! காணவாராய்! என்று புலம்பும் மஹாங்களான அக்ரூரர், மாலாகாரர், ஶரபங்கர், ஶபரி முதலானவர்களுக்குத் தர்ஶநம் கொடுப்பதே ப்ரதாநமாகவும், 'துஷ்டர்களை நாசம் செய்யவேண்டும் என்ற வியாஜத்தாலும் நான் அவதரிக்கிறேன்' என்று க்ருஷ்ணன் அருளிச்செய்கிருர். அப்படி அவதரிக்கும் திருமேனி கர்மஸம்பந்தமற்ற தோஷம் கலவாத பரிசுத்த திவ்ய திருமேனி என்று, 'ஜக³தாமுபகாராய ந ஸா கர்மநிமித்தஜா' என்று, ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும், 'ந பூ⁴தஸங்க⁴ஸம்ஸ்தா²நோ தே³ஹோஸ்ய பரமாத்மந:'—என்று மஹாபாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆழ்வாரும் "ஆதியஞ் சோதியுருவை யங்குவைத்திங்குப் பிறந்தவன்", "துயரில் சுடர்

ஒளி தன்னுடைச் சோதி நின்றவண்ணம் நிற்கவே, மனிசர் பிறவியில் தோன்றி" என்று வெளியிடுகிறார்.

ஆழ்வார்கள் பகவானுடைய கல்யாண குணங்களைவிட அவனுடைய ஸௌந்தர்யத்திலும் திருமேனி அழகிலும் மிக ஈடுபட்டவர்கள். அவனுக்கு ஒரு திவ்யரூப மிருப்பதாக அநேக இடங்களில் பின்வருமாறு வெளியிடுகிறார்:—'தாமரைக் கண்களால் நோக்காய்', - 'அரவிந்தலோசன னென்றே தளரும்', 'முகில் வண்ணு', 'மணிவண்ணன்', 'அஞ்சன வண்ணன்', 'செம்பொன்னே திகழும் திருமூர்த்தி', 'திருவுடம்பு வான்சுடர்', 'செந்தாமரைக் கண்ணன்', 'மின்னும் சுடர்மலை', 'பொன்முடியம்போரேறு', 'நற்பொற்சோதித்தாள் நணுகுவது எஞ்ஞான்று', 'ஒளி மணி வண்ணன்', 'பங்கயக் கண்ணன்', 'தோளுமோர் நான்குடைத் தூமணிவண்ணன்', 'செய்யவாய் மணிக்குன்றம்'. சாந்தோக்ய வாக்கியத்தில் விவரிக்கப்பட்ட பொன்மேனியை உட்கொண்டு பல இடங்களிலும் அருளிச்செய்கிறார். திருவாய்மொழியில் முதல் பத்தில் முதலெழுத்து 'உ' (உயர்வற) என்பதையும் 10-வது பத்தில் கடைசிப் பாட்டில் கடைசி வார்த்தையிலுள்ள 'து' (உயர்ந்தே) என்கிறதையும் சேர்த்தால் 'உத்' என்றாகிறது. அந்த திருநாமம் பகவானுடைய திருநாமமாக மேற்சொன்ன சாந்தோக்ய ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறதைத் தம்முடைய ப்ரபந்தமாகிற திருவாய்மொழியில் முதல் கடை எழுத்துக்களாக வெளியிடுகிறார். இத்திருவாய்மொழியை சாந்தோக்ய உபநிஷத் அடங்கிய ஸாமவேத ஸாரமாக பூர்வாசார்யர்கள் திருவுள்ளம்பற்றி யிருக்கிறார்கள்.

'ஃபயஉதஃவஸொ ஜிவொஜெ்ாதி ஃவ்யுெதெ' என்கிற சாந்தோக்ய வாக்யத்தில் பகவானை ஜ்யோ

பரஞ்ஜோதி. திஸ் என்று சொல்லி யிருப்பதால், ஸகலத்துக்கும் மேலான, எல்லாவற்றிற்கும் காரண

மான வஸ்து, ஜ்யோதிகளுக்கெல்லாம் ஜ்யோதியா யிருப்பவன், என்று நிர்ணயிக்கப்படுகிறான். அவனை, 'சுடர் வெள்ளம்' 'பரஞ்சோதி', 'ஒண்சுடர்க்கற்றை', 'ஒளிக்கொண்ட சோதி', 'பயிலும் சுடரொளி மூர்த்தி' என்று ஆழ்வார் வெளியிடுகிறார்.

மோக்ஷத்தை அளிப்பவன்.

கௌஷீதக உபநிஷத்தில் 'ஸஹோவாச ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம் மாமாயுரம்ருதம்'. [நான் ப்ராணன்; ஸர்வஜ்ஞனான ஆத்மா; என்னை ப்ராணனாகவும் அமிர்தமாகவும் த்யாநம் செய்] என்றும், 'ஸ ஏஷ ப்ராண ஏவ ப்ரஜ்ஞாத்மா ஆநந்தோ அஜரோ அம்ருத:' [அந்த ப்ராணனே அழிவில்லாத ஆநந்த ஸ்வரூபியான ஸர்வஜ்ஞன் என்றும் இந்திரனால் சொல்லப்படுகிறது.] இந்த ச்ருதிகளால் பகவான் மோக்ஷத்தை அளிப்பவன் என்று ஏற்படுகிறது. மோக்ஷத்தைக் கொடுக்கும் வஸ்து ஸாதாரண தேவேந்த்ரனாயிருக்க முடியாது. பகவான் இந்த்ர ப்ராண சப்தங்களால் குறிக்கப்பட்டிருக்கிறான். தேவேந்த்ரனைத் தன் சரீரத்தில் வைத்துக்கொண்டு அவனுக்கு அந்தராத்மாவாயிருக்குமவன், மோக்ஷத்தைக் கொடுக்கிறவன், என்று அர்த்தம் கொள்ளவேண்டும் என்று ஸூத்ரக்காரர் நிச்சயிக்கிறார். ப்ரக்ருதி மண்டலமனைத்தும் சந்த்ரன் ஸூர்யன் முதலான ஸகல தேவர்கள் எல்லாம் அவனுக்குச் சரீரமாக ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது. அவனை எந்த சப்தத்தால் வேண்டுமானாலும் சொல்லலாம். அவனன்றி ஒன்றுக்கும் நாமரூபமில்லை; அவனன்றி ஒரு பொருளு மசையாது; அவனே உயிர்; எல்லாவற்றிற்கும் ஆத்மா; எல்லா சப்தமும் அவனைத்தான் ந்யாயமாய்க் குறிக்கும் என்று வேதாந்தத்தின் உட்கருத்து. இதைத் தெரிந்த வாமதேவர் முதலான மஹர்ஷிகள் தான் மநு ஸூர்யன் என்று பகவதநுபவம் செய்திருக்கிறார்கள். பகவானை ஸத்ய ஸ்வரூபி,

ஜ்ஞாநஸ்வரூபீ என்று மூன்று விதமாக உபாஸநம் செய்யலாம். ஆநந்த ஸ்வரூபி, நிர்மலன் என்று அவன் ஸ்வரூபத்தை த்யாநிப்பது ஒன்று; இவ்வுலக மனைத்தும் அண்டங்களும் சேர்ந்த ப்ரக்ருதி மண்டலம் எல்லாவற்றையும் தனக்குச் சரீரமாக உடையவன், தேவர்களுட்பட ஸகலவித ஜீவன்களுக்கும் அந்தராத்மாவாய் அவர்களைத் தனக்குச் சரீரமாகவுடையவன் என்றும் ஆக மூன்று வித உபாஸனைக ளிருப்பதால், கௌஷீதிக உபநிஷத்தில் இந்த்ரனுகச் சொல்லப்படும் மோக்ஷமளிப்பவன் பகவானே. ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் 'ஸர்வகதத்வாத் அநந்தஸ்ய ஸ ஏவாஹம் அவஸ்திதஃ | மத்தஸ் ஸர்வம் அஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே ||' [ஸ்ரீ அநந்தன், எங்கும் ஆத்மாவாய், உள்ளும் புறமும் வ்யாபித்து, ஜ்ஞாநாநந்தமயனுய் நிறைந்திருக்கிறபடியால், நானும் அவனுகவே இருக்கிறேன்; ஆகையால் என்னிடத்தில் நின்றும் எல்லாம் உண்டாயிற்று; நானே எல்லாமாயிருக்கிறேன்; எப்போது மிருக்கிற என்னிடத்தில் எல்லா மிருக்கின்றன.] என்று ப்ரஹ்லாதன் சொல்லிருன். ஆக வேதாந்த ஸூத்ரம் முதல் பாதத்தில் குறிக்கப்பட்ட முக்ய வேதவாக்யங்களால் கடவுள் சராசரம் அனைத்திற்கும் எல்லா வித காரணமானவன்; ஞான வெள்ளச் சுடர் மூர்த்தி; ஆனந்தக் கடல்; ஸகல கல்யாண குணமுடையவன்; திவ்யமான ரூபத்தை யுடைய பரஞ்சோதி; எப்பொருட்கும் வீடு முதலாம் புணவன். பிறவிக் கடல் நீந்துவார்க்கு என்றும் மோட்சத்தைக் கொடுக்குமவன் என்று நிச்சயிக்கப்பட்டது.

வேதாந்த ஸூத்ரகாலத்தில் சிலர் கீழ் உதாஹரிக்கப்பட்ட மிகத் தெளிவான வேதவாக்யங்களைக்கூட பகவானை ஜகத்காரணமாகக் குறிக்குமோ என்று சங்கித்ததாகத் தெரிகிறது. அப்படி சங்கிக்கக் காரணமில்லை. அவைகள் பகவானையே குறிக்கின்றன. அல்லாமலும் அவனுடைய குணங்களை வெளியிடுகின்றன என்று ஸூத்ரகாரர் தெரிவித்தார். இனி இவ்வளவு தெளிவில்லாமலிரு

க்கும் சில வாக்யங்களை இரண்டாம் பாதத்திலும், மூலப்ருக்ருதி யோ ஜீவனோ ஜகத்காரணமாகலாம் என்று தெரிவிப்பது போலத் தோற்றும். சில தெளிவில்லாத வாக்யங்களை மூன்றாவது நாலாவது பாதங்களில் எடுத்துக்கொண்டு சர்ச்சை செய்து அவைகளும் பகவானைத்தான் காரணமாகக் காண்பிக்கிறதாகவும் அவனுடைய கல்யாண குணங்களையே வெவ்வேறு விதமாக விவரிப்பதாகவும் ஸூத்ரகாரர் நிச்சயிக்கிறார்.

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதா சார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்)	0	2	0
2. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
3. ஸ்ரீ பாகவத தஶஶ்லோகி - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
4. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்	0	4	0
5. ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் (ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது	0	4	0
7. ஆர்யாப்யுதயம். (ஸ்ரீ. உப. டி. இ. சடகோபாசாரியார்	0	2	0
8. ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேஶ விமர்ஶம் (ஸ்ரீ. உப. எம். கே. தாதாசாரியார்)	0	3	0

ஸ்ரீ:

ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் - பதவுரை.

அம்ருதரஞ்ஜநீ.

(தொடர்ச்சி.)

நேரிசை வெண்பா.

ஓதுமுரை நான்கதனி லோங்குமொரு மூன்றினுள்ளே
நீதி நெறிவழுவா நிற்கின்றோம்—போதமரும்
பேரா யிரமுந் திருவும் பிரியாத
நாரா யணனருளா லும். (நக)

(இ - ள்.) போது அமரும் - தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, திருவும் - பெரிய பிராட்டியாரும், பேர் ஆயிரமும் - ஆயிரம் திருநாமமும், பிரியாத - நீங்காத, நாராயணன் அருளால் - ஸ்ரீமந்நாராயணனது கிருபையால், ஓதும் - வாயால் ஓதத்தக்க, உரை நான்கு அதனில் - நாலு வேதங்களிலும், ஓங்கும் உயர்ந்த பொருளாகிய, ஒரு - ஒப்பற்ற, மூன்றின் உள்ளே - ரஹஸ்யத்ரயத்தில் சொல்லப்பட்ட, நீதிநெறி - நீதி மார்க்கமானது, வழுவா - தப்பாமல், நிற்கின்றோம் - நடக்கின்றோம். (எ-று.)

(க - து.) நான்கு வேதங்களின் ஸாரமாகிய ரஹஸ்யத்ரயத்திற் சொன்னபடியே ஸ்ரீமந்நாராயணனது கிருபையால் அநுஷ்டிக்கின்றோம் என்பதாம்.

(கு - பு.) உரை - சப்தம்; அது வேதத்திற்கு ஆகுபெயர். நிற்றல் - நடக்கை. வழுவாமல் என்பது ஈறுதொக்கது. (31)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

ஊன்றந்து நிலைநின்ற வுயிருந் தந்தோ
ருயிராகி யுள்ளொளியோ டுறைந்த நாதன்
தான்றந்த வின்னுயிரை யெனதென் னும
னல்லறிவுந் தந்தகலா நலமுந் தந்து

தான்றந்த நல்வழியாற் றாழ்ந்த வென்னைத்
தன்றனக்கே பரமாகத் தானே யெண்ணி
வான்றந்து மலரடியுந் தந்து வானோர்
வாழ்ச்சிதர மன்னருளால் வரித்திட் டானே. (௩௨)

(இ-ள்.) ஊன் தந்து-எனக்கு இவ்வுடம்பைக் கொடுத்து, நிலை நின்ற-அழியாமலுள்ள, உயிரும் தந்து-ஆத்மாவையும் இதில் சேர்த்து, ஓர் உயிராகி-ஒப்பற்ற அந்தர்யாமியாகி, உள் - மனத்துள், ஒளியோடு - சோதிமயமாய், உறைந்த - எழுந்தருளிய, நாதன் - எம்பெருமான், தான் தந்த-தான் கொடுத்தருளிய, இன் உயிரை - இனிமையான ஆத்மாவை, எனது என்னுமல் - என்னுடையதென்று நினைக்காதபடி, நல் அறிவும் தந்து-சேஷத்வ ஞானத்தையும் கொடுத்து, அகலா-அழியாத, நலமும் தந்து-அதனாலுண்டான ஸந்தோஷத்தையும் கொடுத்து, தான் தந்த - தான் கொடுத்தருளிய, நல் வழியால் - நல்ல சரணகதி மார்க்கத்தால், தாழ்ந்த என்னை - தன் திருவடியைச் சேர்ந்த என்னை, தன் தனக்கே பரம் ஆக - தன்னொருவனுக்கே கடமையாக, தானே எண்ணி - தானே நினைத்து, வான் தந்து - பரமபதத்தைக் கொடுத்து, மலர் அடியும் தந்து - தாமரைமலரையொத்த தனது திருவடி கைங்கரியத்தையும் கொடுத்து, வானோர் வாழ்ச்சி தர - நித்திய சூரிகளோடு கூடிச்சந்தோஷிக்கும் வாழ்வைத் தருவதற்கு, மன் அருளால் - திடமான கிருபையால், வரித்திட்டான் - என்னை வரித்து விட்டான். (எ - று.)

(க-து.) ஸ்ரீமந்நாராயணன் தனது பொருளாகிய எனது அகங்கார மமகாரங்களை நீக்கி, என்னைத் தன்திருவடியில் சேர்த்துக்கொள்ள நிச்சயித்து விட்டான்.

(கு-பு.) ஊன் - உடம்பிற்குக் கருவியாகுபெயர். (32)

நேரிசை வெண்பா.

திருமா லடியிணையே திண்சரணக் கொண்டு
திருமா லடியிணையே சேர்வார்—ஒருமா
லருளா லுருளாத வானோர்கள் வாழ்ச்சி
அருளா னமக்களித்தா ராய்ந்து. (௩௩)

(இ-ள்.) திருமால் - திருவோடுகூடிய நாராயணனுடைய, அடி இணையே - இரண்டு பாதங்களையே, திண் சரண் கொண்டு - பலமான ஆதாரமாகக் கொண்டு, திருமால் - அந்த எம்பெருமானது, அடி இணையே சேர்வார் - அந்த அடிகளையே சேரும் நமது ஆசார்யர்கள், ஒரு - ஒப்பில்லாத, மால் அருளால் - அந்த பகவானது கிருபையால், உருளாத - அழியாத, வானோர்கள் வாழ்ச்சி - நித்திய சூரிகள் செய்யும் கைங்கரியத்தை, அருளால் - கிருபையோடு, ஆய்ந்து-ஆராய்ந்து, நமக்கு அளித்தார் - நமக்குக் கொடுத்தார்கள். (எ - று.)

(இ-ள்.) திருநாராயணனது திருவடியே சரணமாக அடைந்த ஆசாரிகள் என்றைக்கும் அழியாத வைகுந்த வாழ்க்கையை எனக்குக் கொடுத்தார்கள் என்பதாம்.

(கு-பு.) ஏகாரம் பிரிநிலை. (33)

கட்டளைக்கலித்துறை.

சேர்க்குந் திருமகள் சேர்த்தியின் மன்னுதல் சீர்பெரியோற்
கேற்குங் குணங்க ளிலக்காம் வடிவி லிணையடியைப்
பார்க்குஞ் சரணத்திற் பற்றுத னன்னிலை நாம்பெறும்பே
றேற்கு மவற்றினு ளெல்லாங் களையற வெண்ணினமே. (௩௪)

(இ-ள்.) சேர்க்கும் - உயிர்களை எம்பெருமானிடம் சேர்க்கின்ற, திருமகள் பெரிய பிராட்டியாருடைய, சேர்த்தியில் - சேர்க்கையிலே, மன்னுதல்- பொருந்துகையும், சீர் - சிறப்புப்பொருந்திய பெரியோன் கு - பெரிய பெருமாளுக்கு, ஏற்கும் - தகுந்த, குணங்கள்-குணங்களுக்கு, இலக்கு ஆம்-லக்ஷ்யமாகிய, வடிவில் - ரூபத்தில், இணை அடியை - இரண்டு திருவடிகளையும், பார்க்கும்-தர்சிக்கத்தக்க, சரணத்தில் - உபாயத்தில், பற்றுதல் - பொருந்துகையுமாகிய, நல் - நல்ல, நிலை - அழியாத, நாம்—, பெறும் - அடையத்தக்க, பேறு - செல்வமாக, ஏற்கும் - ஒத்திருக்கின்ற, அவற்றினுள் எல்லாம் - அவைகளில் எல்லாவற்றையும், களை அற-விரோதம் அறும்படி, எண்ணினம் - அறிந்தோம் (எ - று.)

(க - து.) ஒரு விரோதமும் இன்றி எம்பெருமான் திருவடிகளைத் தரிசிக்கத்தக்க பாக்கியத்தைப் பெற்றோம் என்பதாம்.

(கு - பு.) இது எம்பெருமானை அடைந்து அனுபவிக்கும் ஆனந்தத்தைக் குறிக்கின்றது. இதில் வல்லின இடையின மெய்கள் மெய்யெதுகையாய் வந்தன. (34)

இதுவுமது.

திருமா லடியிணை சேர்ந்து திகழ்ந்த வடிமைபெறத்
திருநா ரணன்சர ணேசர ணாகத் துணிந்தடைவோர்
ஒருநா ளுரைக்க வுயிர்தரு மந்திர மோதியநாம்
வருநாள் பழுதற்று வாழும் வகையதின் மன்னுவமே. (௩௫)

(இ-ள்.) திருமால் - திருநாராயணரது, அடி இணை - இரண்டு பாதங்களையும், சேர்ந்து - அடைந்து, திகழ்ந்த - விளங்கிய, அடிமை பெற - கைங்கரியத்தைப் பெறுவதற்கு, திரு நாரணன் - அந்த எம்பெருமானது, சரணே - திருவடிகளே, சரணாக துணிந்து - ஆதாரமாக நிச்சயித்து, அடைவோர் - அவனை அடையும் ஆசார்யர்கள், ஒரு நாள் உரைக்க - ஒரு தரம்

சொல்ல, உயிர் தரு மந்திரம்-ஆத்மரக்ஷை செய்யும் மந்திரத்தை,ஓதிய நாம் - உச்சரிக்கின்ற நாம், வருநாள் - இனிவருங்காலமெல்லாம், பழுது அற்று - வீணுகாமல், வாழும்வகை அதில் - வாழும் விதத்திலே, மன்னுவம்-பொருந்துவோம். (எ - று.)

(க - து.) திருநாராயணனையே சரணமாக அடைந்த ஆசார்யர்கள் ஒரு தரம் மந்திரோபதேசம் செய்தபின் இனி வரும் காலம் வீணுகாமல் வாழத் தக்க பாக்கியத்தைப் பெறுவோம் என்பதாம்.

(கு - பு.) உயர்ந்த மந்திரமென்பது த்வயத்தை. (35)

நேரிசை வெண்பா.

மற்ருெரு பற்றின்றி வந்தடைந்த வர்க்கெல்லாம்
குற்ற மறியாத கோவலனுர் - மற்றும்
வினைவிடுத்து விண்ணவரோ டொன்றவிரைகின்ருர்
நினைவுடைத்தாய் நீமனமே நில்லு. (௩௬)

(இ - ள்.) மற்று ஒரு பற்று இன்றி - வேருெரு ஆதாரமில்லாமல், வந்து அடைந்தவர்க்கு எல்லாம் - வந்து தன்னைச் சரணமாக அடைந்தவரிடத்தெல்லாம், குற்றம் அறியாத - உள்ள தோஷங்களைப் பாராத, கோவலனுர் - கோபாலனுகிய கண்ணபிரான், மற்றும் - பின்னுமுள்ள, வினை விடுத்து - நமது கர்மங்களைப் போக்கி, விண்ணவரோடு - நித்திய சூரிகளுடன், ஒன்ற - நாம் கூடியிருக்கும்படி, விரைகின்ருர் - த்வரிதப்படுகின்ருர் - மனமே - மனதே!, நினைவு உடைத்தாய் - நிச்சயமுடையவனுய், நீ நில்லு - நீ இரு. (எ - று.)

(க - து.) கண்ணபிரான் வேருென்றை நம்பாமல், தன்னையே சரணமாக அடைந்தவரையெல்லாம் அவர் செய்த பாபத்தைப் போக்கிமோக்ஷத்தையும் கொடுக்க த்வரிதப்படுகிருர் ; மனமே நீ நிச்சயமாயிரு.

(கு - பு) கோபாலன் என்பது கோவலன் எனமருவியது. (36.)

கட்டளைக்கலித்துறை.

எல்லாத் தருமமு மென்னை யிகழ்ந்திடத் தானிகழா
தெல்லாந் தனதென வெல்லா முகந்தரு டந்தபிரான்
கல்லார் மதக்களி ருெத்த வினைத்திரண் மாய்ப்பனென்ற
சொல்லாலினியொருகாற்சோகியாத் துணிவுற்றனமே. (௩௭)

(இ - ள்.) எல்லா தருமமும் - தருமங்களெல்லாம், என்னை இகழ்ந்திட - என்னை விட்டு நீங்கவும், தான் இகழாது - தான் என்னைக் கைவிடாமல், எல்லாம் தனது என-அந்தத் தருமங்களெல்லாம் தன்னுடையதென்றுஎண்ணி, உகந்து - சந்தோஷித்து, எல்லாம் - அந்தப் பலன்களை எல்லாம், அருள் தந்த

பிரான் - கிருபையோடு கொடுத்தருளிய கண்ணபிரான், கல் ஆர் - கல்லால் அமைந்த, மதம் களிறு ஒத்த-மதம் பிடித்த யானை போன்ற, வினை திரள் - மிகுந்த பாபங்களை, மாய்ப்பன் - போக்குவேன், என்ற - என்று கீதையில் சொன்ன, சொல்லால் - வாக்கியத்தால், (சரமச லோகத்தால்) இனி - இனிமேல், ஒருகால் - ஒருபோதும், சோகியா - சோகமடையாத, துணிவு உற்றனம் நிச்சயமடைந்தோம் (எ - று.)

(க - து.) 'தருமமொன்று மில்லாதவர்க்கும் கிருபை செய்து உமது பாவத்தைப் போக்குவேன் துக்கிக்க வேண்டாம்' என்று சொல்லி யருளிய கண்ணபிரானது வாககியத்தால் தைரியமடைந்தோம் என்கிறார்.

(கு - பு.) தைரியத்தை உடையவனது தொழில் அதன்மேல் நின்றது. (37.)

சந்த விருத்தம்.

எட்டிலா றிரண்டிலொன் றிலங்குமா றியம்புவார்
விட்டவாறு பற்றுமாறு வீடுகண்டு மேவுவார்
சிட்டரான தேசுயர்ந்த தேசிகர்க்கு யர்ந்துமேல்
எட்டுமூன்று மூடறுத்த தெந்தை மாலிரக்கமே. (௩அ)

(இ - ள்.) எட்டில் - திருவஷ்டாக்ஷரத்திலும், ஆறு இரண்டில் - ஆறு பதமாய் இரண்டு வாக்கியமான துவயத்திலும், ஒன்று - ஒப்பற்ற சரமசுலோகத்திலும், இலங்கும் ஆறு - விளங்கும் உபாயத்தை, இயம்புவார் - சிஷ்யருக்கு உபதேசிப்பவரும், விட்ட ஆறு - விலக்கு என்று விடத்தக்கதையும், பற்றும் ஆறு - விதியாகச் செய்யத்தக்கதையும், வீடு - மோக்ஷத்தையும், கண்டு - அறிந்து, மேவுவார் - அநுஷ்டிப்பவரும், சிட்டர் ஆன - சிஷ்டருமாகிய, தேசு உயர்ந்த - ஒளிமிகுந்த, தேசிகர்க்கு - ஆசார்யரால், எந்தை - எமது சுவாமியான, மால் - பெருமாளது, இரக்கம் - கிருபையானது, மேல் உயர்ந்து - மேன்மையாக விளங்கி, எட்டு மூன்றும் - இருபத்துநான்கு தத்துவமாய் விரியும் பிரகிருதி சம்பந்தத்தை, ஊடு அறுத்தது - நடுவில் சேதித்து விட்டது. (எ - று.)

(க - து.) ஆசாரிய கடாக்ஷத்தால் நேர்ந்த கண்ணனது கிருபையால் எனது பிரகிருதி சம்பந்தம் ஒழிந்தது என்க.

(கு - பு.) தேசிகர்க்கு வேற்றுமை மயக்கம். (38.)

அமிர்தரஞ்ஜனீ முற்றிற்று.

சொல்ல, உயிர் தரு மந்திரம்-ஆத்மரக்ஷை செய்யும் மந்திரத்தை,ஓதிய நாம் - உச்சரிக்கின்ற நாம், வருநாள் - இனிவருங்காலமெல்லாம், பழுது அற்று - வீணாகாமல், வாழும்வகை அதில் - வாழும் விதத்திலே, மன்னுவம்-பொருந்துவோம். (எ - று.)

(க - து.) திருநாராயணனையே சரணமாக அடைந்த ஆசார்யர்கள் ஒரு தரம் மந்திரோபதேசம் செய்தபின் இனி வரும் காலம் வீணாகாமல் வாழத் தக்க பாக்கியத்தைப் பெறுவோம் என்பதாம்.

(கு - பு.) உயர்ந்த மந்திரமென்பது துவயத்தை. (35)

நேரிசை வெண்பா.

மற்றொரு பற்றின்றி வந்தடைந்த வர்க்கெல்லாம்
குற்ற மறியாத கோவலனார் - மற்றும்
வினைவிடுத்து விண்ணவரோ டொன்றவிரைகின்றார்
நினைவுடைத்தாய் நீமனமே நில்லு. (௩௬)

(இ - ள்.) மற்று ஒரு பற்று இன்றி - வேறொரு ஆதாரமில்லாமல், வந்து அடைந்தவர்க்கு எல்லாம் - வந்து தன்னைச் சரணமாக அடைந்தவரிடத்தெல்லாம், குற்றம் அறியாத - உள்ள தோஷங்களைப் பாராத, கோவலனார் - கோபாலனாகிய கண்ணபிரான், மற்றும் - பின்னுமுள்ள, வினை விடுத்து - நமது கர்மங்களைப் போக்கி, விண்ணவரோடு - நித்திய சூரிகளுடன், ஒன்ற - நாம் கூடியிருக்கும்படி, விரைகின்றார் - த்வரிதப்படுகின்றார் - மனமே - மனதே!, நினைவு உடைத்தாய் - நிச்சயமுடையவனாய், நீ நில்லு - நீ இரு. (எ - று.)

(க - து.) கண்ணபிரான் வேறொன்றை நம்பாமல், தன்னையே சரணமாக அடைந்தவரையெல்லாம் அவர் செய்த பாபத்தைப் போக்கிமோக்ஷத்தையும் கொடுக்க த்வரிதப்படுகிறார்; மனமே நீ நிச்சயமாயிரு.

(கு - பு) கோபாலன் என்பது கோவலன் எனமருவியது. (36.)

கட்டளைக்கலித்துறை.

எல்லாத் தருமமு மென்னை யிகழ்ந்திடத் தானிகழா
தெல்லாந் தனதென வெல்லா முகந்தரு டந்தபிரான்
கல்லார் மதக்களி றொத்த வினைத்திரண் மாய்ப்பனென்ற
சொல்லாலினியொருகாற்சோகியாத் துணிவுற்றனமே. (௩௭)

(இ - ள்.) எல்லா தருமமும் - தருமங்களெல்லாம், என்னை இகழ்ந்திட - என்னை விட்டு நீங்கவும், தான் இகழாது - தான் என்னைக் கைவிடாமல், எல்லாம் தனது என-அந்தத் தருமங்களெல்லாம் தன்னுடையதென்றுஎண்ணி, உகந்து - சந்தோஷித்து, எல்லாம் - அந்தப் பலன்களை எல்லாம், அருள் தந்த

பிரான் - கிருபையோடு கொடுத்தருளிய கண்ணபிரான், கல் ஆர் - கல்லால் அமைந்த, மதம் களிறு ஒத்த-மதம் பிடித்த யானை போன்ற, வினை திரள் - மிகுந்த பாபங்களை, மாய்ப்பன் - போக்குவேன், என்ற - என்று கீதையில் சொன்ன, சொல்லால் - வாக்கியத்தால், (சரமச லோகத்தால்) இனி - இனிமேல், ஒருகால் - ஒருபோதும், சோகியா - சோகமடையாத, துணிவு உற்றனம் நிச்சயமடைந்தோம் (எ - று.)

(க - து.) 'தருமமொன்று மில்லாதவர்க்கும் கிருபை செய்து உமது பாவத்தைப் போக்குவேன் துக்கிக்க வேண்டாம்' என்று சொல்லி யருளிய கண்ணபிரானது வாககியத்தால் தைரியமடைந்தோம் என்கிறார்.

(கு - பு.) தைரியத்தை உடையவனது தொழில் அதன்மேல் நின்றது. (37.)

சந்த விருத்தம்.

எட்டிலா றிரண்டிலொன் றிலங்குமா றியம்புவார்
விட்டவாறு பற்றுமாறு வீடுகண்டு மேவுவார்
சிட்டரான தேசுயர்ந்த தேசிகர்க்கு யர்ந்துமேல்
எட்டுமூன்று மூடறுத்த தெந்தை மாலிரக்கமே. (ங௮)

(இ - ள்.) எட்டில் - திருவஷ்டாக்ஷரத்திலும், ஆறு இரண்டில் - ஆறுபதமாய் இரண்டு வாக்கியமான துவயத்திலும், ஒன்று - ஒப்பற்ற சரமசுலோகத்திலும், இலங்கும் ஆறு - விளங்கும் உபாயத்தை, இயம்புவார் - சிஷ்யருக்கு உபதேசிப்பவரும், விட்ட ஆறு - விலக்கு என்று விடத்தக்கதையும், பற்றும் ஆறு - விதியாகச் செய்யத்தக்கதையும், வீடு - மோக்ஷத்தையும், கண்டு - அறிந்து, மேவுவார் - அநுஷ்டிப்பவரும், சிட்டர் ஆன - சிஷ்டருமாகிய, தேசு உயர்ந்த - ஒளிமிகுந்த, தேசிகர்க்கு - ஆசார்யரால், எந்தை - எமது சுவாமியான, மால் - பெருமாளது, இரக்கம் - கிருபையானது, மேல் உயர்ந்து - மேன்மையாக விளங்கி, எட்டு மூன்றும் - இருபத்துநான்கு தத்துவமாய் விரியும் பிரகிருதி சம்பந்தத்தை, ஊடு அறுத்தது - நடுவில் சேதித்து விட்டது. (எ - று.)

(க - து.) ஆசாரிய கடாக்ஷத்தால் நேர்ந்த கண்ணனது கிருபையால் எனது பிரகிருதி சம்பந்தம் ஒழிந்தது என்க.

(கு - பு.) தேசிகர்க்கு வேற்றுமை மயக்கம். (38.)

அமிர்தரஞ்ஜனீ முற்றிற்று.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஸக்ருத்த்வதா3கார விலோகநாஶயா
த்ருணீக்ருதாநுத்தமபு4க்திமுக்திபி4: ।
மஹாத்மபி4ர் மாமவலோக்யதாம் நய
க்ஷணே(அ)பி தே யத்3விரஹோ(அ)திது3:ஸஹ: ॥ 56.

56. கீழ் ஶ்லோகத்தால் பாகவத ஸந்நிகர்ஷத்தை ப்ரார்த்தித்து விட்டு, ஸ்ரீ ஆளவந்தார், இந்த ஶ்லோகத்தினல், அந்த ஸந்நிகர்ஷத்தின் பல விஶேஷத்தை ஸூசிப்பிக்கிருர். 'பாகவதர்களுடைய அத்யந்த ஸந்நிகர்ஷத்தை யாசிக்கும் பேராசை கொண்டவனல்லேன்; அவர்கள் கண்டால் உபேக்ஷியாதே நம்முடையவனென்று கடாக்ஷிக்கும்படி அடியேனை அநுக்ரஹித்தால் போதும்' என்று இந்த ஶ்லோகத்தினல் விஜ்ஞாபநம் செய்யப்படுகிறது என்று அவதாரிகாந்தரம்.

"யஸ்யாநவத்3யஜ்ஞா பா3ஹ்யத்3ருஷ்டிர்வ்யதிஷ்டி2தா ।
தத்3ருஷ்டிகோ3சரா: ஸர்வே முச்யந்தே ஸர்வகில்பி3ஷை: ॥"

[நிராபாதமான தத்வ விஷயக ஜ்ஞானத்தையும் [illegible] குணமான அநுபவத்தையுமுடைய மஹாத்மாக்களின் கடாக்ஷ விஷயமானவரெல்லாரும் ஸமஸ்த பாபங்களிலிருந்தும் விமுக்தராகிருர்கள்] என்று பாகவத கடாக்ஷ ப்ரபாவம் ப்ரஸித்தமாயிருக்கின்றது.

ஸக்ருத் த்வதாகார விலோகநாஶயா த்ருணீக்ருதாநுத்தம புக்தி முக்திபி: மஹாத்மபிர் மாமவலோக்யதாம் நய க்ஷணேऽபி தே யத்விரஹோऽதிது:ஸஹ: - [ஹே பகவந்! ஒருதடவையாவது உன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்துக்கொள்ள வேணு மென்னு மாசையின்பேரில் ப்ரஹ்மைச்வர்யம் மோக்ஷம் முதலியவைகளைக் கூட யாதொரு பாகவதோத்தமர்கள் அநாதரிக்கிறார்களோ அவர்களுடைய கடாக்ஷத்திற்கு விஷயமாகும்படி ஸர்வ ஶக்தனான நீயே என்னை அநுக்ரஹிக்க வேணும். ஸ்வத: பூர்ணனாயும் அவாப்த ஸமஸ்தகாமனாயு முள்ள உனக்கே அவர்களுடைய க்ஷணமாத்ர விரஹமும் ஸுது:ஸஹமாக இருக்கின்றதன்றோ?]

"நாராயணேதி யஸ்யாஸ்யே வர்த்ததே நாம மங்களம் |
நாராயணஸ் தமந்வேதி வத்ஸம் கௌரிவ வத்ஸலா ||"

['நாராயண' என்னும் ஶுபமான திருநாமத்தை எவனொருவன் உச்சரிக்கின்றானோ, அவனிடத்தில், வத்ஸலையான பஶு 'அம்மா' என்று கதறும் தனது கன்றினிடத்தில் நாற்றுவது போல, ஸ்ரீமந்நாராயணன் எப்பொழுதும் நாற்றி நிற்கிறான்] என்கிறபடி, பகவானுக்கே அவர்களின் விஸ்லேஷம் துஸ்ஸஹமாக இருந்தால், ஸாபேக்ஷனான எனக்குக் கேட்பானேன்? என்பது கருத்து.

ஸக்ருத் த்வதாகார விலோகநாஶயா - ஒரு தடவையாவது உன்னுடைய விக்ரஹத்தைக் காணுவோமா? என்னும் ஆசையாலே. ஸதா தர்ஶநம் பண்ணவேண்டியது இருக்க 'ஸக்ருத்' (ஒருதடவை) என்று ஸ்ரீ ஆளவந்தார் அநுக்ரஹித்தது ஏன்? என்றால், ஒரு தடவை அவலோகநமே ஸமஸ்த புருஷார்த்தத்தையும் ஸாதித்துக் கொடுக்கக்கூடியது என்பதை வ்யஞ்சிப்பிக்கும் பொருட்டே.

"𑌦𑍃𑌷𑍍𑌟 𑌏𑌵 𑌹𑌿 𑌨𑌃 𑌶𑍋𑌕𑌮𑌪𑌨𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵𑌃"

[பார்த்த மாத்திரத்திலே ஸ்ரீராகவன் நமது ஸகல ஶோகத்தையும் நிவ்ருத்திப்பிக்கிறான்] என்கிறபடி, 𑌸𑌕𑍃𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍇 ஸமஸ்த புருஷார்த்த ஸாதகமாகின்றது. 'ஸத்தையைப் பெற்றவர்களுக்கன்றோ ஸார்வகாலிக தர்ஶநமாகிற போகம் ப்ராப்தமாகும்? ஸக்ருத் அவலோகநத்தைச் செய்து நாம் முதலில் ஸத்தையைத் தரிப்பித்துக் கொள்வோம்?' என்பதை இது ஸூசிப்பிக்கின்றது என்றும் சொல்லலாம்.

'நமது ஶோக நிவ்ருத்திக்கு, பகவானுடைய ஸ்வரூப ஜ்ஞாநமாவது அந்த ஸ்வரூபத்தை ஆஶ்ரயித்து நிற்கும் குணாநுபவமாவது அவ்வளவாக அபேக்ஷிதங்களல்ல; அவனது திவ்ய மங்கள விக்ரஹத்தின் தர்ஶநமே போதுமானது' என்பதை '𑌦𑍃𑌷𑍍𑌟' என்னும் பதம் த்யோதிப்பிக்கின்றது. அந்த விக்ரஹத்தின் ஸ்பர்ஶமோ அல்லது '𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌂 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌗𑌂' என்கிறபடி காடாலிங்கநாதிகளோ இவையொன்றும் வேண்டா; அதன் கேவலம் தர்ஶநமே போதும் என்பது '𑌵𑌿𑌲𑍋𑌕𑌨' என்னும் பதத்தின் தாத்பர்யம்.

𑌤𑍃𑌣𑍀𑌕𑍃𑌤𑌾𑌨𑌨𑍍𑌤𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 - 𑌅𑌨𑌨𑍍𑌤𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 - 𑌅𑌨𑌨𑍍𑌤𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍀. 𑌤𑍃𑌣𑍀𑌕𑍃𑌤𑍇 𑌅𑌨𑌨𑍍𑌤𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍀 𑌯𑑈𑌸𑍍𑌤𑍇; 𑌤𑑈𑌃. த்ருணீகரிக்கப்பட்ட அநந்தமங்களான போகங்கள் மோக்ஷம் இவைகளை யுடைய. பகவானுடைய விக்ரஹ ஸேவையில் ஆஶை ஜநித்தால், அதைத்தவிர்த்த மற்றை போகங்களில் எப்படி மநஸ் ப்ரவ்ருத்திக்கும்?

"𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌮𑑈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌨 𑌕𑌾𑌮𑌯𑍇 ।
𑌕𑌾𑌮𑌂 𑌕𑌂𑌸𑍋 𑌹𑌰𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌂𑌶𑍋 𑌵𑌾 𑌯𑌮𑍁𑌨𑌾𑌤𑌟𑍇 ॥'

[ப்ரஜாபதியின் ஐஶ்வர்யமும் பஶுபதியின் ஐஸ்வர்யமும் எனக்கு அநபேக்ஷிதங்கள்; கண்ணனால் விஹரிக்கப்படும் யமுனா நதி

யின் தீரத்தில் இருக்கும் கதம்பம் குந்தம் முதலிய வ்ருக்ஷங்களுடைய ஐஸ்வர்யமே எனக்கு உத்தேஸ்யம்] என்றன்றோ அதன் போக்யதையை அறிந்திருக்குமவர்கள் கதறியிருக்கிறார்கள்?

'கூநாதூ' என்னும் பதம் 'ஸாக்தூ' என்னும் பதத்துடன் மாத்ரம் அந்வயிக்கின்றது; 'ஜாக்தூ' என்னும் பதத்துடனும் எடுத்துக்கொண்டால், மோக்ஷத்தில் தாரதம்யமில்லை யாதலால், பரம புருஷார்த்த லக்ஷணமான மோக்ஷமென்றுமட்டில் அர்த்தங்கொள்ள வேணும்.

ஊஹாதூஹி: - பாகவதோத்தமர்களால். 'போகாந்தரங்களில் போக்யதா புத்தியில்லாமல் பரமைகாந்திகளா யிருக்குமவர்களால்' என்பது கருத்து. 'ஸ ஊஹாதூா ஸாஜாமூஹ:' என்று ஸ்ரீபகவானே கொண்டாடி யிருக்கிறான்.

கூவலொகூதாம் ஊா நய - அவலோகநார்ஹனுக்குப்படி என்னை அநுக்ரஹிக்க வேண்டும். 'நய' - 'அகிஞ்சனனான எனக்கு உன்னுடைய ஶேஷத்வ ஜ்ஞாநத்தையும் உன்னிடத்திலும் உன்னுடையவர்களிடத்திலும் த்ருடமான பக்தியையும் கொடுத்து மஹத்தான உபகாரத்தைச் செய்திருக்கும் நீயே, இப்பொழுது பாகவத கடாக்ஷத்தையும் பெறுவித்து என்னை அநுக்ரஹிக்க வேணும்' என்பது இந்தப் பதத்தின் குறிப்பு.

க்ஷணெஉவிதெ யஷிரஹொஉதி ஊா:ஸஹா: - அப்படிப்பட்ட பாகவதர்களுடைய க்ஷண மாத்ர விஸ்லேஷமும் உனக்கே அஸஹ்யமன்றோ? உனக்கே அவர்கள் அவ்வளவு ப்ரீதி பாத்ரங்களாக இருந்தால், எனக்கு அவர்கள் அதிமாத்ரம் ஆதரணீயர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?' என்பது கருத்து.

இவ்விடத்தில் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையின் அவதாரிகை அதீவ ஹ்ருதயங்கமம். 'நம்பக்க லொழிய நம்முடையார் பக்

கல் 'கீட ஜந்நாவ்யூஹ' என்றும் 'கவமொகூ்யதாம நய' என்றும் அத்யாதாரத்தைப் பண்ணுகிறதெத்தாலே யென்ன; ஸாபேக்ஷனை நான் ஆதரிக்கைக்கு ஹேதுவைச் சொல்லுகிறேன்; ஸ்வதஃ பூர்ணனை தேவருக்கு அவர்களுடைய விப்ம்லேஷம் அஸஹ்யமா யிருக்கைக்கு ஹேது அருளிச்செய்ய வேணும் என்கிறார்.'

'விரஹஃ' - ஸர்வ வ்யாபியாய் இருக்கும் பகவானுக்கு பக்தர்களின் விப்ம்லேஷம் என்பது எப்படி ஸம்பவிக்கும்? அந்த விப்ம்லேஷம் ஸம்பவித்தால் பகவானுக்கு ஶோகமும் ஜநிக்குமோ? என்று ஶங்கை ஜநிக்கக்கூடும். இவ்விடத்தில் 'விரஹ' ஶப்தத்தால் விப்ம்லேஷம் விவக்ஷிதமன்று; பக்தர்களுக்கு தனது விக்ரஹம் முதலியவற்றின் அநுபவ விச்சேதமே அதன் தாத்பர்யம். 'ஓுஃஸஹ' என்னும் ஶப்தத்தால் கேதம் குறிக்கப்படவில்லை; பக்தர்களுக்குத் தனது விக்ரஹாத்யநுபவ விச்சேதத்தை ஒருபொழுதும் ஜநிப்பிக்கிறதில்லை என்று மட்டில் கருத்து.

ஸ்ரீ. வாஸுதேவன்.

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஶிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கடிதங்கள்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

அடியேன் கிருஷ்ண ராமானுஜன் மிகுந்த வணக்கமாய் நமஸ்காரம் செய்து தெரிவித்துக்கொள்ளும் விக்ஞாபனம்.

அடியிற் கண்ட சந்தேகத்திற்கு, விபரமான பதில் நிவர்த்தியாகும்படியாக தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

அடியேன் **தாஸ நம்பி** என்ற வகுப்பைச் சேர்ந்தவன். தாஸ நம்பி என்ற வகுப்பானது அநாதி காலமாக ஏற்பட்டதா? அல்லது எந்த காலத்தில் யாரால் ஏற்பட்டதென்றும் எந்த வகுப்பிலிருந்து பிரிவு என்றும் தாஸ நம்பி என்றவர்களுக்கு ஆசார அனுஷ்டானம் இன்னதென்றும் அவர்கள் இருக்க வேண்டிய நடை யுடை முதலானவைகள் இன்னவையென்றும் இதற்கு கிரந்த மூலமான ஆதாரங்கள் உண்டா யென்பதற்கும் அப்படி கிரந்த மூலமான ஆதாரமிருந்தால் எந்த கிரந்தத்தில் என்ன விதமான ஆதாரமென்றும் விபரமாக நமது தீபிகை மூலமாவது அல்லது கடித மூலமாயாவது தெரிவிக்கும்படியாக மிகுந்த வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அடியேன் நேரில் அநேக பாகவதோத்தமர்களிடத்தில் மேல் கண்ட சந்தேகத்தைத் தெரியப்படுத்தியும் நிவர்த்தியாகாததால் அடியேன் தங்கள் சமுகத்திற்கு தெரியப்படுத்தலானேன். எந்த விதத்திலும் தங்கள் சமுகத்திலிருந்து சந்தேக நிவர்த்தியாகும்படியான மார்க்கம் ஏற்படுமென்பதே அடியேனுடைய நம்பிக்கை. ஆகையால் தாங்கள் அடியேன்பேரில் கிருபை வைத்து மேற்கண்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்யும்படியாக மிகுந்த வணக்கமாய் பிரார்த்தித்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு: தங்கள்,

திருக்காட்டுப்பள்ளி, 3—11—17. } ஸ்ரீபாததூளி கிருஷ்ணராமானுஜன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

மதிராஸ்.

ஏழாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

திருவையாறு ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸம்வர்த்தநீ ஸபை யின் ஆஹ்வாநத்தின் பேரில், மதிராஸ் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை யின் ஏழாவது வார்ஷிக மஹா ஸங்கம் நாளது பிங்களஷு மார்கழி மாஸம் 12, 13, 14,-ம் தேதிகளில் (1917 டிஸம்பர் 26, 27, 28,) தஞ்சாவூருக்கடுத்த திருக்கண்டியூரில் நடைபெறுகின்றது. திருக்குடந்தை வித்வான் ஸ்ரீ. உப. திருமலை மாடபூசி சதுஸ் ஸாஸ்த்ர வேத கல்பதரு ஶேஷாசார்யர், முதல் தினத்தில் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து ஸதஸ்ஸை உபக்ரமிக்க க்ருபையுடன் அங்கீகரித்திருக்கிறார். அநேக பரிகணிதர்களான பண்டிதர்கள், நமது வேதாந்த விஷயமாகவும் மத விஷயமாகவும் உபந்யாஸங்களைச் செய்வதாகத் திருவுள்ளம் பற்றி இருக்கிறார்கள். இரண்டாவது மூன்றாவது தினங்களின் பூர்வாஹ்நத்தில் வித்வத் ஸதஸ் ஒன்றும் நடைபெறும். உபந்யாஸ க்ரமங்கள் மறுபக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஆஸ்திகர்களாயுள்ள ஸகல பாகவதர்களும் அக்காலத்தில் அவ்விடத்தில் க்ருபையுடன் ஸந்நிஹிதர்களாக இருந்து ஸதஸ்ஸைப் பூர்த்தி செய்து வைக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

மயிலாப்பூர்,
பிங்களஷு
கார்த்திகை 27உ.
(11—12—17)

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.
தி. கோதண்டராம ஐயங்கார்.
(ஸ்ரீ. வை. ஸி. ஸபை கார்யதர்சிகள்.)
எஸ். வேதாந்தாசார்யர்.
(திருவையாறு ஸபையின் அத்யக்ஷர்.)

பிங்களஷு மார்கழிமீ 12உ புதன்கிழமை (26—12—17)

ஸ்ரீ. உப. வித்வான் ஶேஷாசார்யர்: (அக்ராஸநாதிபதி).

பகல் 8-30—11-மணி- i. திருவையாறு ஸபாத்யக்ஷரின் ஸ்வாகதம்.

ii. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.

iii. ஸ்ரீ. உப. வித்வான் இஞ்சிமேடு ரங்கநாதாசார்யரின் உபந்யாஸம்.

பகல் 1-30—5 - மணி

ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர் ஸ்ரீரங்கம். (அக்ராஸநம்.)

i. "ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள பகவத் ஸ்தோத்ரங்கள்": ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர், மயிலாப்பூர்.

ii. "ஆலய தர்மம்": ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

iii. "ஶிஷ்ய க்ருத்யம்": ஸ்ரீ. உப. வித்வான் தில்லியம்பூர் சக்ரவர்த்யாசார்யர்.

இரவு 8 - மணி - புராண ப்ரவசநம்: ஸ்ரீ. உப. வித்வான் பெரியமுறை ஸ்ரீநிவாஸாசார்யர், நெடுந்தெரு.

பிங்களஸூ மார்கழிமீ 13உ வியாழக்கிழமை (27—12—17)

பகல் 8—11 - மணி- i. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை அங்கத்தினர்களின் வார்ஷிக ஸங்கம்.

ii. வித்வத் ஸதஸ்.

பகல் 1-30—5 - மணி

ஸ்ரீ. உப. வித்யாபூஷணம் ஏ. கோவிந்தசார்யர், மைசூர். (அக்ராஸநம்.)

i. "ஈஶ்வர தத்வம்": ஸ்ரீ. உப. வித்வான் ஈயுண்ணி ஸ்ரீநிவாஸாசார்யர்.

ii. "ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த வைபவம்": ஸ்ரீ. உப. எஸ். வேதாந்தாசார்யர், திருவையாறு.

iii. "ஸ்பர்ஶ தோஷம்": ஸ்ரீ. உப. வித்வான் அக்நிஹோத்ரம் கோபால தேஶிகாசார்யர், திருக்குடந்தை.

இரவு 8 - மணி: புராண ப்ரவசநம்.

பிங்களஸூ மார்கழிமீ 14உ வெள்ளிக்கிழமை (28—12—17)

பகல் 8—11 மணி: வித்வத் ஸதஸ்.

பகல் 1-30—5 - மணி

ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீநிவாஸ மாதவாசார்யர். (அக்ராஸநம்.)

i. "பகவதவதாரமும் வர்ணாஶ்ரம தர்மங்களும்": ஸ்ரீ. உப. வித்வான் வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர்.

ii. "ஜீவதத்வ விவேகம்": ஸ்ரீ. உப. வித்வான் ஸ்வச்சந்தம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

iii. "பக்தி யோகம்": ஸ்ரீ. உப. வித்வான் நவநீதம் கிருஷ்ணமாசார்யர்.

இரவு 8 - மணி: ஹரிகதை.

ஸ்ரீ:.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

சந்தா வரவு.

(1917 - நவம்பர் மாஸம்)

I. சென்ற வருஷத்திய சந்தா :—

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ. உப. டி. ஆர் - ஸ்ரீநிவாஸ ஐய்யங்கார், தஞ்சாவூர்	1	8	0
2. ,, வி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐய்யங்கார், திருச்சினாபள்ளி	3	0	0

II. நாளது வருஷத்திய சந்தா :—

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ. உப. தி. வெங்கடாசாரியார் கும்பகோணம்	3	0	0
2. ,, ஜீ. கே. இரங்கசாமி ஐயங்கார், டெல்லி	3	0	0
3. ,, ட. ஸ்ரீநிவாஸ ஐய்யங்கார் சின்னகாஞ்சிபுரம்	3	0	0
4. ,, டி. ஆர். வெங்கடாசல பிள்ளை, சிகந்தராபாத்	3	0	0
5. ,, ம. ஸ்ரீநிவாஸா சாரியார், கும்பகோணம்	3	0	0

மயிலாப்பூர்,
5—12—17.

ஸ்ரீ. வாஸுதேவன்.

(ஸ்ரீ. வை. ஸி. ஸபை கார்யதர்ஶி)

50 சாமான்கள் இனாம்!! 50 சாமான்கள் இனாம்!!

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

ராஜ சுந்தரி ரோஜா.

கூந்தல் வளரும் பரிமளத்தைலம்.

50 இனாம் சமாகளுடன் டின் 1-க்கு ரூபா 1—0—0

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரிகளும், தலை மயிர் உதிர்ந்து போகாமலிருக்க வேண்டுமென்று விரும்புகிற ஸ்திரிகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக் கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மதுராதாரமுடைய பரிமளத்தைத் தெரிந்து அவைகளை வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீள்மாள் வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சையைத் தரும் சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டெப்புண் மயிர்வெடிப்பு, மயக்கம், தலைவலி, சொறிசிரங்கு மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் இதுஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜாராணி கார்னேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்டு கார்டுகள் 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜாராணி உள்ள அந்தமான புரூக்ஸ் 1. அக 50.

சர்வதேள் விஷ சஞ்சீவி.

கதரிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற்

குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100- இனாம் கோடுக்கப்படும்!!!

விலை பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

டசன் 1-க்கு ரூ. 5 0 0.

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

ஸ்ரீ:.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

மதிராஸ்.

1916-17-ம் வர்ஷத்திய எக்ஸிக்யுடிவ் போர்ட்

மெம்பர்களின் பெயர்.

1. ஸ்ரீ. உப. கெ. ஸ்ரீநிவாச ஐயங்கார், } போஷகர்கள்
2. ஆனரெபில் கெ. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார் } போஷகர்கள்
3. ஸ்ரீ. உப. திவான் பஹதூர், டி. டி. ரங்காசார்யர்—ஸபாத்யக்ஷர்.
4. ,, ராவ் பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார். } ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.
5. ,, டி. ராஜகோபாலாசார்யர். } ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.
6. ,, எஸ். வாஸுதேவாசார்யர். } கார்யதர்ஸிகள்.
7. ,, டி. கோதண்டராம ஐயங்கார். } கார்யதர்ஸிகள்.
8. ,, ஸி. ராஜகோபாலாசார்யர், சித்தூர்.
9. ,, டி. நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
10. ,, டி. அநந்தாசார்யர், விழுப்புரம்.
11. ,, குமார சக்ரவர்த்தி ஐயங்கார், திருச்சி.
12. ,, வெ. இ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு.
13. ,, டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவெவ்வுளூர்.
14. ,, ஆர். நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
15. ,, கே. ஏ. வீரராகவாசார்யர், மதிராஸ்.
16. ,, ஸி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவல்லிக்கேணி.
17. ,, டி. இ. சடகோபாசார்யர், கூடலூர்.
18. ,, வி. ரங்காசாரியர், திருவல்லிக்கேணி.
19. ,, என். ரங்கஸ்வாமி அய்யங்கார், கர்னூல்.
20. ,, எம். நரஸிம்ஹமாசார்யர், நெல்லூர்.
21. ,, ஸி. துரைஸ்வாமி அய்யங்கார், சித்தூர்.
22. ,, டி. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், கோயம்புத்தூர்.
23. ,, என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்.
24. ,, எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார், மதுரை.
25. ,, கொடியாலம் சேஷாத்திரி அய்யங்கார், ஸ்ரீரங்கம்.
26. ,, கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், நாகப்பட்டணம்.
27. ,, பி. கே. கருடாசார்யர், மைசூர்.
28. ,, பி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எழும்பூர்.
29. ,, டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.
30. ,, எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்.
31. ,, எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர்.
32. ,, வித்தியாபூஷணம் எ. கோவிந்தாசாரியர், மைஸூர்.
33. ,, ஸி. கோபாலாசாரியார், பூந்தமல்லி.